விடிவை நோக்கி...

ஆர். சூடாமணி



விடிவை நோக்கி

ஆர். சூடாமணி

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர், : : சென்னை-4.

முதல் பதிப்பு- 2000 C: மே, 1959.
உரிமை பதிவு.
விலை: ந. பை. 80

Printed at Metropolitan Printers, Madras-2.

முன்னுரை

குறுநாவல் என்பது இலக்கிய உலகில் ஒரு நவீனத் துறை. பிரான்ஸ் தேசத்தில் 'நாவலெட்' என்ற பெயரில் பிறந்த இலக்கியமாகிய இது, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் உருவாகியது என்று சொல்லலாம். ஆயினும் இதற்குள்ளேயே நல்ல வளர்ச்சியை அடைந்திருக்கிறது. எதையும் துரிதமாகச் செய்ய விரும்பும் அவசரம் நிறைந்த இக்காலத்தில் நாவலோடுகூடக் குறுநாவலும் வளர்ந்துவிட்டதில் ஆச்சரியமில்லை. நாவலின் விரிவோடு சிறுகதையின் வேகத்தைச் சேர்த்து இரண்டு துறைகளின் சிறப்புக்களால் மூன்றாவதொரு பெருஞ்சிறப்பை உருவாக்கும் பொருட்டுச் செய்யப்பட்ட முயற்சியே குறுநாவல்.

சமீப காலத்தில் தமிழில் குறுநாவல் இலக்கியம் வெகுவாக வளர்ந்திருக்கிறது. இப்புதிய துறையைக் கையாளும் ஆவல் ஒன்றிலேயே இந்தக் கதை எழுதப்பட்டது. கதையின் விஷயமும் மற்ற அம்சங்களும் இந்த உத்தேசத்துக்கு அடுத்தபடிதான். மேலும் எழுத்தில், விஷயத்தைவிட அமைப்பே முக்கியமானது.

இக்கதை முதலில் கலைமகளில் வெளிவந்தது. இப்போது புத்தகம் கலைமகள் பிரசுரமாக வெளிவருகிறது. கலைமகள் ஸ்தாபனத்துக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதராஸ்-31,
1-6-59.

ஆர். சூடாமணி

விடிவை நோக்கி......

வாழ்க்கை என்பது என்ன?

அதுதான் பவானிக்குப் புரியவில்லை. அவள் வாழ்ந்து கொண்டிருந்ததுதான் உண்மையான வாழ்க்கையா? முப்பது வயசுக்குள் பல விதமான ஏமாற்றங்களையும் சிறுமைகளையும் அநுபவித்து உலகத்திலிருந்து விலக்கப் பட்டவள்போல் பாயும் படுக்கையுமாக, உயிர் இருந்தும் இறந்தவளாக நாட்களைக் கழித்துக்கொண்டிருக்கிறாளே, இதுதான் வாழ்க்கையா?

'ஏன் இப்படி ஆகவேண்டும்? ஏன்? ஏன்?'

இந்தக் கேள்விதான் திரும்பத் திரும்ப அவள் உள்ளத்தை வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

'நான் என்ன பாவம் செய்தேனென்று இப்படித் தண்டிக்கப்பட்டேன்?'

கேள்விகள்தாம் பெருகின. பதில் கிடைக்கவில்லை.

'என் கதி ஏன் இப்படி ஆயிற்று? ஏன்?'

வாழ்க்கையே ஒரு பெரிய, 'ஏன்' ஆகிவிட்டது.

'சாதுவாய்ப் பிறந்ததுதான் என் குற்றமா?'

சாதுவாய்ப் பிறந்தது அவள் முதல் குற்றம். சாதுவாக இல்லாத ஒருவனை மணந்துகொண்டது அவளுடைய இரண்டாவது குற்றம். அந்தக் குற்றத்தின் விளைவுதான் இந்த ஆயுள் தண்டனை.

'அவர் ஏன் என்னை இப்படி நடத்தவேண்டும்? நான் எப்போதும் அவருக்கு அடங்கி அன்புடன் நடந்து கொள்ளவில்லையா? என்னை மனுஷிபோல் அவர் என்றும் நடத்தவில்லை; யந்திரமாகவே நடத்தினர். ஆயினும் என் கடமையை நான் அன்போடு செய்துவர வில்லையா? பின் ஏன் இப்படி?'

'அன்புக்கும் எல்லை உண்டு. அன்பு வெறுப்பாக மாறிவிட்டால் பிறகு அது என்றும் பழையபடி அன்பாக மாருது. குற்றங்கள் மன்னிக்கப்படலாம்; வெறுப்பு இருந்த இடத்தில் உணர்ச்சியற்ற ஓர் அமைதி தோன்றலாம். ஆனல் அன்பு மறுபடியும் தோன்ருது. சென்றுபோன அன்பு சென்றுபோன இளமை போன்றது தான்.'

அவள் அன்பும் மறைந்து போய்விட்டதா? அப்படித் தான் தோன்றியது.

'அன்பு இன்னும் எப்படித் தங்கியிருக்கும்?'

பவானி ஆத்திரத்துடன் அறையைச் சுற்று முற்றும் பார்த்தாள். அவள் படுத்திருந்த படுக்கை துல்லியமாய் ஆஸ்பத்திரிப் படுக்கைபோல் விளங்கியது. சுத்தமாக வைத்திருந்த அறையில் அதிகச் சாமான்கள் இல்லாமல் அவசியமானவை மட்டுமே இருந்தன. தலைமாட்டில் ஒரு மேஜை. அதில் அவள் சௌகரியத்துக்காகத் தேர்ந் தெடுத்த கிண்ணங்களும் தட்டுகளும் ஸ்பூன்களும்; அருகில் ஒரு மண்சட்டியில் வாசனைப் பொருள் கலந்த குடி தண்ணீர். கட்டிலின் அருகில் இருந்த சிறு 'டீபா'யில் ஒரு பூக்கிண்ணம். பூக்களின் மணம் மனத்தை ரமிக்கச் செய்தது. அதன் பக்கத்தில் சில புத்தகங்கள். பலவீன மாக இருந்த அவள் தூக்கக்கூடியவையான மெல்லிய புத்தகங்கள். அலமாரியில் கிரமமாக அழகாக அடுக்கி வைத்திருந்த மருந்து சீசாக்கள். ஒரு மூலையில் 'தர்மா

மீட்டரும் உடல் உஷ்ணத்தின் குறிப்புக்கள் அடங்கிய காகிதமும். கட்டிலின் பக்கத்தில் இருந்த ஜன்னலில் இரண்டு கதவுகள் திறந்தும் இரண்டு மூடியும் இருந்தன. அதிகக் காற்று அடித்து அவளுக்குச் சீதளத்தை உண்டாக்கிவிடக் கூடாது என்பதற்காக எஜமானர் போட்ட உத்தரவால் அந்த இரண்டு கதவுகளும் எப்போதும் சாத்தியே வைத்திருந்தன. 'அவருக்குத் தம் மனைவியிடம் உள்ள அன்பும் அக்கறையும் இதனால் எவ்வளவு வெளிப்படுகின்றன!' என்று ஊரே அதிசயித்தது. அறையில் எப்போதும் இருக்கும்படி எஜமானரால் நியமிக்கப்பட்டிருந்த நர்ஸும் இந்த அன்பைக் கண்டு வியந்தாள்.

பவானி, சுற்று முற்றும் பார்ப்பதைக் கண்டு அருகில் வந்த நர்ஸ், "ஏதாவது வேண்டுமா, அம்மா?" என்றாள்.

"ஒன்றும் வேண்டாம்" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் பவானி. நர்ஸ் முகத்தைச் சுளுக்கினாள். 'எஜமானர் எவ்வளவு அன்பாக, மனைவியின் சௌகரியத்துக்காக நர்ஸைக் கூடவே அமர்த்தியிருக்கிறார்! அந்த நன்றி இந்த நோயாளிக்குக் கொஞ்சமேனும் இருக்கிறதா?' என்றுதான் அவள் நினைத்திருக்க வேண்டும்.

அது ஒரு நோயாளியின் அறை.

அந்த அறையின் முழு ஏற்பாட்டையும் செய்தவன், பவானியின் கணவன் ஹரிஹரன்தான். 'என்ன பரிவாய்ப் பார்த்துப் பார்த்து அமைத்திருக்கிறார்!' என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். தினம் காலையில் ஹரிஹரன் அங்கே வந்து அவளைத் தூரத்திலிருந்து விசாரித்துவிட்டுப் போவான். நண்பர்கள் வந்தால் அழைத்துவந்து அவளுக்குக் காட்டுவான். இரண்டு நிமிஷப் பேட்டி கிரமமாக நடந்தபின் கிரமமாக அவர்களை வெளியே அழைத்துப் போவான். தினம்

டாக்டர் வந்து அவளைப் பார்க்கச் செய்வான். ஊரில் உள்ள வைத்தியர்கள் எல்லோரையும் கொண்டுவந்து காட்டியிருக்கிருன்.

ஹரிஹரனுக்குத் தன் நோயாளி மனைவியிடம் உள்ள பாசத்தையும் பரிவையும் புகழாதவர் இல்லை.

பவானி, எப்போதும் அந்த அறையிலேயே படுக்கையில் படுத்திருக்க வேண்டும் என்பது அவன் உத்தரவு. 'அவள்,உடல்நலத்தைக் கருதும் அன்பில் உதித்த உத்தரவு இது!' என்று ஊரே தீர்ப்பு அளித்தது. ஆனல் பவானியின் நோய் குணமாகவே இல்லை. அவளுக்கு மனநோய்!

2

அந்த மனநோய் இன்று நேற்று ஏற்பட்டதா? பதினெட்டாவது வயசில் - மணப்பெண்ணுக மணைமேல் உட்கார்ந்திருந்த அன்றே - அது ஆரம்பமாகி விட்டது.

"இது என்னடி, பவானி, உன் புருஷர்?", வந்திருக்கும் பெண்களையெல்லாம் விழுங்கிவிடுவதுபோல் அப்படிப் பார்க்கிருர்'.

"பார்த்ததனுல் என்ன தவறு, மாமி? பெண்களைப் பார்ப்பது ஆண்சாதியின் இயற்கை."

சீட்டாட்டத்தில் பக்கத்தில் இருப்பவர் கைச் சீட்டை முதலில் பார்ப்பது போலத்தான். அதைச் சமயம் கிடைத்தபோது பார்த்துவிட வேண்டும். தன் சீட்டை எப்போது வேண்டுமானுலும் பார்த்துக்கொள்ளலாம்.

'இதற்குக் கல்யாணம் செய்துகொள்வானேன்?'

இதுவும் அவள் வாழ்வின் பல பதிலற்ற கேள்விகளில் ஒன்ருகிவிட்டது.

'கல்யாணமே இல்லாதிருந்தால் நான் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருப்பேன்! அல்லது வேறு யாரை

யாவது மணம் செய்துகொண் டிருந்தால்?...அவர் என் மனத்தை நோகச் செய்தது கொஞ்சமா? ஏன், ஏன்? அவ்வளவுக்கும் பிறகு இப்போது இந்த அறையை விட்டு வெளியே போகக்கூடாதென்று செய்துவிட்டாரே! அவரை எனக்குப் பார்க்கவேண்டாம். ஆனால் ரகு? என் குழந்தையின் அருகில் இருந்து அன்பு செய்யக் கூடவா எனக்கு உரிமை இல்லை?'

குழந்தை - குழந்தைகள். அவள் வாழ்வில் கண்ட பயன்? இந்த எண்ணம், ஆரம்பத்தில் மனவேதனைக்குக் காரணமாக இருந்தது. இப்போது ஆறுதலுக்குக் காரண மாகிவிட்டது. ரகுவுக்காகவே அவள் யாவற்றையும் பொறுத்துக்கொண்டாள்.

3

யந்திரம்!

அவள் ஒரு யந்திரம். அப்படித்தான் ஹரிஹரன் நினைத்தான்.

நிறைகர்ப்பிணியாக அவள் உட்கார்ந்துகொண் டிருந்தாள். கல்யாணமாகி ஒரு வருஷம் பூர்த்தியாகவே இன்னும் காலம் இருந்தது.

கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பன்னிரண்டு. பகல் வேளை. காலையில் வெளியே போன கணவன் இன்னும் திரும்பவில்லை. அவன் திரும்பி வந்து குளித்த பிறகு சாப்பிட உட்காருவான். அப்போதுதான் அவளும் சாப்பிடுவாள். ஒரு வருஷப் பரிசயத்தில் அவன் குணம் நன்கு தெரிந்துவிட்ட போதிலும், கணவன் வெறும் வயிருக இருக்கையில் தான் சாப்பிடுவது அவளுக்குச் சம்மதம் இல்லை.

எவ்வளவு நேரம் காத்திருப்பது? தன் பலவீன நிலையில் அவளால் பசியைத் தாங்கவே முடியவில்லை. அவனுக்குத் தெரியும், அவள் காத்திருப்பாள் என்று. என்றாவது அவளைப்பற்றி, அவள் சுகத்தைப்பற்றி, அவன் நினைத்தது உண்டா?

ஒரு மணி அடிக்க இருந்தபோது ஹரிஹரன் வந்தான். குளித்துவிட்டு, "பதினொரு மணிக்கு ஒரு நண்பனுடன் ஹோட்டலில் வயிறு நிறையச் சிற்றுண்டி சாப்பிட்டேன்; பசிக்கவில்லை" என்றான்.

பொங்கிவந்த அழுகையை அடக்கிக்கொண்டு பவானி, "நாழிகை ஆகிவிட்டதே! ஒரு வாய் சாப்பிட்டுவிடுவோம். சமையல்காரனுக்கும் வேலை முடியும்" என்றாள்.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த ஹரிஹரன் தன் உணர்வே இல்லாமல் இலையில் உட்கார்ந்தான்.

பவானி, அவனுடன் இன்னோர் இலையடியில் உட்கார்ந்துகொண்டாள். அப்போது, "ஹரிஹரன்!" என்று ஒரு குரல் கேட்டது.

ஹரிஹரன், "என் சிநேகிதன் ரத்தினம் வந்திருக்கிறான். அவனோடு எவ்வளவோ பேசவேண்டும்" என்று சொல்லி எழுந்து போய்விட்டான்.

அன்னத் துளிகளுக்குப் பதில் அவளுடைய கண்ணீர்த் துளிகள்தாம் இலையில் விழுந்தன.

4

பிரசவமானபோது மட்டும் என்ன? மிகவும் கஷ்டப் பிரசவம். வேதனையெல்லாம் ஒருவாறு முடிந்ததும் தீனமான குரலில், வீட்டு வேலைக்காரியிடம், "ஐயா எங்கே இருக்கிறார், காத்தாயி? கொஞ்சம் என்னை வந்து பார்க்கச் சொல்லேன்" என்றாள் பவானி.

காத்தாயி அவளிடம் பக்தி விசுவாசம் பூண்டவள். கையைப் பிசைந்துகொண்டே, “உங்களுக்குப் பிரசவ மாகக் கொஞ்ச நேரம் செல்லும்னுங்க, நரசம்மா. ‘அப்ப டின்னு நான் நாடகம் பார்த்துட்டு வந்திடறேன்'னு ஐயா கிளம்பிட்டாரு” என்ருள்.

பவானி, தன் நெஞ்சை அழுத்திக்கொண்டாள். ஆனல் துக்கத்தை அழுத்திவிட முடியவில்லை.

“நான் அவ்வளவு வலியுடன் இருந்தபோதா?”

“என்னுங்க பண்றது? ஏதோ டவுனிலே ரொம்பப் பெரிய நாடகக் கொட்டகையாமுங்களே; அங்கேதான் போறேன்னுரு. என் புருஷனை விட்டு அழைச்சுவரச் சொல்லட்டுமுங்களா?”

“வேண்டாம். என்னை அவர் மறந்தால் நான் எந்த விதத்தில் ஞாபகப்படுத்துவேன்?”

டவுனில் பெரிய கொட்டகை, ‘டையானு தியேட்டர்’ தான். அங்கே நாடகத்தில், அழகி சாருபாலா கதா நாயகி.

முதல் பிரசவம் இப்படி. அதைத் தொடர்ந்து பல பிரசவங்கள் வந்தன. அன்னையின் துக்கத்தைச் சகிக்க முடியாமல் வயிற்றிலேயே வாடி மெலிந்த அவள் செல்வக் குழந்தைகள் வயிற்றிலேயோ வெளிவந்த கொஞ்ச காலத் திலோ கண்ணை மூடிக்கொண்டன.

அவளுக்கு இஷ்டம் இருந்ததோ இல்லையோ, அவள் துயரம் இடம் கொடுத்ததோ கொடுக்கவில்லையோ, தின மும் மாலையில் கணவனின் நண்பர்கள் வரும் வேளையில் அவள் அலங்காரமாகக் காட்சி அளிக்கவேண்டும். தன் கௌரவத்துக்கு அதுதான் ஏற்றதென்று ஹரிஹரன் சொல்லிவிட்டான்.

அவன் கௌரவம்: அவனுக்கு அதுதான் என்றும் லட்சியம்.

அப்போது அவள் வயிற்றில் இரண்டு மாதங்களாக மூன்ரும் குழந்தையைச் சுமந்துகொண் டிருந்தாள்.

படுத்துக்கொண் டிருந்த மனைவியிடம் வந்து ஹரி ஹரன், "பவானி, எழுந்து டிரஸ் செய்துகொள். இன்று என் மேலதிகாரியின் வீட்டில் விருந்து. உன்னையும் அழைத்துவருவதாகச் சொல்லியிருக்கிறேன்" என்ருன்.

புனல் துளிக்கும் சோகக் கண்களை உயர்த்தி, பவானி அவனை நோக்கினுள். "என் உடல் நிலை உங்களுக்குத் தெரியும், தலையைத் தூக்கினுல் சுற்றிக் கீழே தள்ளுகிறது. உடம்பிலெல்லாம் வலி" என்ருள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ வராவிட்டால் பெண்டாட்டியை அழைத்துவர இவனுக்கு இஷ்டம் இல்லை என்று என்னைத்தான் இகழ்வார்கள். என் மானம் போய்விடும்."

"உங்கள் மானம் ஒன்றுதான் உங்களுக்குப் பெரிது; அப்படித்தானே?"

அவன் பதில் சொல்லவில்லை; அவன் கண்கள் சொல்லின. உதட்டைக் கடித்துக்கொண்டு பவானி தலையைத் தலையணையில் புதைத்துக்கொண்டாள். அழுகை தோய்ந்த குரலில், "எனக்கு இன்று உடம்பு கொஞ்சங்கூடச் சௌகரியம் இல்லை. அப்புறம் எப்போதாவது போகலாம்" என்ருள்.

"சரி சரி, எழுந்து வா, உடனே."

'இவன் மனித ஜன்மந்தானு?' என்று அவள் பொருமினுள். அவனுக்கு அவள் விஷயமாக இப்படிப்பட்ட கேள்வியே எழவில்லை. அவள் ஒரு யந்திரம் என்பதில் அவனுக்குச் சந்தேகம் என்றுமே வந்ததில்லை.

5

ஹரிஹரன் வேலையில் உயர்ந்து உயர்ந்து ஊர்ப் பிரமுகர்களில் ஒருவன் ஆகிக்கொண் டிருந்தான். பவானி சோகம், தாபம், ஆத்திரம் இவற்றின் உருவாக விளங் கினுள். இவை அவள் உள்ளத்தை மட்டுமல்லாமல் உடலையும் உருக்கிக்கொண் டிருந்தன. இவற்ருேடு வெறுப்பும் சேர்ந்தது. சிறிது சிறிதாக நடந்த ஒரு செயலா? அல்லது திடீரென்று ஒரு விநாடியில் நடந்ததா?

'மனிதத் தன்மை சற்றும் இல்லாத கொடுமையின் உருவம் இது' என்று கணவனின் தரத்தை மதிப்பிட்டு அவனிடம் வெறுப்புத் தோன்றியது, ஒரு விநாடியின் நிகழ்ச்சியானுல், அந்த விநாடி எப்போது வந்தது?

கல்யாணமாகி ஏழு வருஷங்கள் ஆகியிருந்தன. அவ ளுடைய வயிற்றில் ஆருவது குழந்தை!

"காத்தாயி, ஏன் வாட்டமாக இருக்கிருய் ?" என்று கேட்டாள் பவானி ஒரு நாள். காத்தாயியும் அப்போது கர்ப்பவதி.

"என்னத்தை அம்மா சொல்வேன்! குளிகுளிக்க நான் ஆஸ்பத்திரிக்குப் போகணுமாம். இது சொல்லுது" என்று தன் புருஷன் வேலனைச் சுட்டிக்காட்டிப் பிணங்கினுள் காத்தாயி.

வேலனும் தன் விண்ணப்பத்தைத் தெரிவித்துக் கொண்டான். "நீங்களே சொல்லுங்கம்மா. இவளை வூட்டிலேயே வச்சுக்கணுமாம். உதவிக்கு இவ இங்கே இருக்கிற தூரத்துச் சொந்தக்காரி ஒருத்தியைக் கூட்டிக் கலாம்கிரு. அவுங்களெல்லாம் சும்மா வந்துட்டுப் போவாங் களா அம்மா ? பணம் காசு கொடுக்கணும். மருந்தும் பாங்க, மாயம்பாங்க, எல்லாம் செலவுதானே ?'

காத்தாயி சொன்னாள்: "இப்போ எங்ககிட்டக் கொஞ்சம் பணம் இருக்குதம்மா. அதைச் செலவளிச்சா த்தான் என்னவாம்? நான் வூட்டிலேயே இருந்தேன்னு இது சரியாச் சாப்பிட்டுதா இல்லையான்னெல்லாம் கவனிச்சுக்குவேன். நான் இல்லாட்டி இது சரியா உடம்பைப் பார்த்துக்கிற தில்லைங்க. எனக்கு எப்படி ஆசுபத்திரிக்குப் போக மனசு வரும்?"

பவானி, நிறைந்த உள்ளத்துடன் வேலனிடம், "அவள் இஷ்டம்போல்தான் விடேன்" என்றாள்.

"அது இல்லைங்க, அந்தப் பணத்தை இவளுக்கு ஏதாச்சும் நகை செய்து போடலாம்னு சேர்த்துச் சேர்த்து வச்சிருக்கிறேன். அதனாலேதான் அதை வேற விதமாச் செலவளிக்க எனக்கு மனசு வரலே. இல்லேன்னா இவளை விட்டு இருக்கணும்னு நான் ஆசைப்படறேன்?"

காத்தாயி, "பின்னே இங்கே வேறே யாராச்சுந்தான் பிரியணும்னு சொல்லுறாங்களா?" என்று செல்லக் கோபத்துடன் சொல்லும்போதே அவள் கன்னங்கள் சிவந்துவிட்டன.

இந்த அந்நியோந்நிய தம்பதியைப் பார்த்துக்கொண்டிருப்பதிலேயே பவானியின் வெற்று இருதயத்துக்கு ஓர் ஆறுதல் கிடைத்துவந்தது. அவர்களுக்கு உதவி செய்யும் எண்ணமே அவளுக்கு இனிமையாக இருந்தது.

"நான் ஒன்று சொல்கிறேன். வேலா, நீ அவள் இஷ்டம் போல் அவளை வீட்டிலேயே வைத்துக்கொள். பணம் செலவழிவதைப்பற்றிக் கவலைப்படாதே. காத்தாயி குழந்தையைப் பெற்று எடுத்துவந்து எனக்குக் காட்டும்போது என் பரிசாக அவளுக்கு என் தங்கச் சங்கிலி ஒன்றைக் கொடுக்கிறேன். உன் ஆசையும் நிறைவேறும்" என்றாள்.

அதன்படி செய்யவும் செய்தாள்.

ஆனால விஷயம் தெரிந்தபோது ஹரிஹரன் சீறினன். "உன்னை யார் என்னைக் கேட்காமல் நகையைத் தூக்கிக் கொடுக்கச் சொன்னது? என்ன பெரியதனம் இதெல்லாம் ?"

எஜமானனுடைய குணத்தை நன்கறிந்த வேலன் தங்கச் சங்கிலியைக் கொண்டுவந்து அவனிடம் திருப்பிக் கொடுத்தான்.

"என் விருப்பத்துக்காகத் தயவு செய்து அதை அவனுக்கே கொடுத்துவிடுங்கள்" என்று பவானி மன்றாடினள்.

ஹரிஹரன் அதைக் காதிலேயே வாங்கிக்கொள்ள வில்லை. வெறுப்பைத் தந்த அந்த விநாடி அப்போதுதான் வந்ததா?

6

ஆருவது குழந்தை பிறந்தபோது, ஏற்கனவே பல வீனமாக இருந்த அவள் உடல் அடியோடு உடைந்துபோய் விட்டது. பல நாட்கள் விடாமல் ஜுரம் அடித்ததில் மிகவும் துர்ப்பலம் ஆகிவிட்டாள். படுத்துக்கொண்டே யிருந்தால் தேவலைபோல இருந்தது. அப்போது ஒரு டாக்டர், 'இப்படியே பலவீனமாக இருந்தால் காசநோயில் கொண்டுபோய் விடலாம்' என்றார். வேறொரு டாக்டர், 'அந்த நோய் ஆரம்பமே ஆகிவிட்டது' என்றார். அழகிழந்த மனைவியை ஒதுக்க ஹரிஹரனுக்கு உன்னதமான சந்தர்ப் பம் கிடைத்துவிட்டது. அவள் க்ஷயத்தினல் பீடிக்கப் பட்டுவிட்டாள் என்று அவளிடமே அறிவித்துவிட்டு அவளைப் படுக்கையோடு ஐக்கியமாக்கினன். தனக்குப் புகழ் வரும்படியாக நாலு பேர் பார்க்கும் விதத்தில் அவளு டைய அறையில் ஏற்பாடுகளைச் செய்து நர்ஸையும் நிய

மித்தான். வீட்டுக்கு வருபவர்களை யெல்லாம் அந்த அறைக்கு அழைத்து வந்து காட்டினான். வைத்தியர்களையும் பார்வையாக அழைத்துவந்து அவளைக் காட்டினான். அவள் நோயைப்பற்றி அவர்கள் நிச்சயமாக எதுவும் சொல்லவில்லை. காசநோய் இல்லையென்று சொன்ன வைத்தியர்களைப்பற்றியும் அவன் கவலைப்படவில்லை. நோய் வாய்ப்பட்டு மரிக்கும் மனைவிக்கு வைத்தியம் செய்து அன்பாகப் பாதுகாக்கும் கணவனாகவே அவன் ஊருக்கெல்லாம் விளங்கினான்.

இந்த ஹோதாவில் அவனிடம் அநுதாபமும் சுவாரசியமும் காட்டுபவர் மிகுந்தனர். இவைகளை நன்கு பயன்படுத்திக்கொண்டு அநுதாபக் கடலில் ஆனந்தமாகக் குளித்துக்கொண் டிருந்தான் அவன். 'மனைவி நிரந்தர நோயாளி; படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் தெம்பு அற்றவள். அவள் புருஷன்—ஐயோ பாவம்! முகம் எவ்வளவு வாட்டமாயிருக்கிறது! ஆள் எவ்வளவு அழகாக இருக்கிறார்!' அந்த அழகனின் துக்கம் இம்மாதிரியான சூழ்நிலையில் மிகவும் கவர்ச்சியாக இருந்தது. அவன் கண்ணைத் துடைத்த கரங்கள்—முக்கியமாக வளைக் கரங்கள்—அவன் உள்ளத்தில் களிப்பை அள்ளிக் கொடுத்தன. இந்த நிலைமையே சுவர்க்கமாக அவன் மகிழ்ந்து கிடந்தான்.

ஆனால் பவானி?

படுத்த படுக்கையாக இருப்பதை அவள் பொருட்படுத்தவில்லை. கணவன் முகத்தைப் பார்க்காமல் அவள் வாடவில்லை. ஆனால் அவள் குழந்தை? மற்றக் குழந்தைகளைப்போல அல்லாமல் ரகு உயிர் வாழ்ந்தான். குழந்தை, அவளிடம் போகக்கூடாது என்பது எஜமானர் உத்தரவு. இதில் ஹரிஹரனுக்கு உண்மையில் ஓர் அக்கறையும் இல்லை. ஆனால் நாய் வேஷம் போட்டாயிற்று. குரைக்கா

மல் முடியுமா? ஸ்ரீமதி ஹரிஹரன் நிரந்தர க்ஷயரோகத்தில் வருந்துகிறவள் என்று நினைக்கும் உலகின் கண்முன் குழந்தையை அவளுடன் சேர்ந்திருக்க விடமுடியுமா?

காலை வேளையில் அவன் அந்த அறைக்கு வரும்போது குழந்தையை அழைத்து வருவான். அந்த ஒரு வேளைக்காகவே பவானி எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு உயிர்வாழ்ந்தாள்.

7

அன்று வீடு தடபுடல் பட்டது. பல நண்பர்களுக்கு வீட்டில் ஒரு விருந்து நடக்கிறதென்பதைக் காத்தாயியின் மூலம் பவானி தெரிந்துகொண்டாள்.

ஆவல் மிகும் கண்களுடன், "காத்தாயி, ஒரு காரியம் செய்வாயா எனக்காக?" என்றாள்.

"எது வேணும்னாலும் செய்வேனம்மா, நீங்க சந்தோசமாயிருந்தா சரி."

"விருந்துக்கு எல்லாரும் கீழே கூடியிருக்கிற சமயத்தில் நீ ரகுவைக் கொஞ்சம் இங்கே தூக்கி வருகிறாயா?"

இதைக் கேட்டுக்கொண்டிருந்த நர்ஸ் குறுக்கிட்டாள்: "ஏம்மா, குழந்தையை உங்களிடம் சேர்க்கக்கூடாதென்று சொல்லியிருக்கிறாரே; அதன் நன்மைக்குத்தானே?"

கெஞ்சும் விழிகளுடன் பவானி அவளைப் பார்த்தாள். "நர்ஸ், எனக்கு ஓர் உடம்பும் இல்லை. என் குழந்தையை என்னிடம் விட்டுவிட்டால் எனக்கு உடனே குணமாகி விடும்" என்றாள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாதம்மா. உங்கள் உடல்நிலைதான் ஊர் அறிந்த விஷயமாயிற்றே. குழந்தை இங்கே வரவே கூடாது. அதைத் தவிர வேறு எது வேண்டுமானாலும் கேளுங்கள்."

"எனக்குச் சந்தோஷம் வேண்டும்."

நர்ஸின் முகத்தில் புன்னகை அரும்பியது. "அதைக கொடுக்க நான் என்ன, கடவுளா அம்மா?"

"கடவுள்கூட எப்போதும் கொடுப்பதில்லை. ஆனுல் மனிதன் மனம் வைத்தால் கடவுள் கொடுத்துத்தான் ஆக வேண்டும். குழந்தை தூரத்திலேயே விளையாடட்டும். அவனைக் கண்ணுல் பார்க்கிறேனே நர்ஸ்; கூடாதா?"

அவளுடைய தீனமான பார்வை காத்தாயியை உடனே பேச வைத்தது: "இந்தாங்க நரசம்மா, உங்களுக்கு இதெல்லாம் தெரியாது. நீங்க புள்ளகுட்டி பெறெல்ல. நான் பெத்திருக்கேன். அம்மா மனசு எனக்குப் புரியுது; ஏன்னு நான் முத்துவுக்கு அம்மா. தாயார்கூட இருந்திச்சுன்னு குழந்தைகளுக்கு ஒரு நோவும் வராது. நான் கூட்டிக்கிட்டு வரேனம்மா."

பவானி, அகன்ற விழிகளுடன் நர்ஸைப் பார்த்தாள். நர்ஸ் இப்போது மறுத்துக் கூருமல் மௌனமாகவே நின்ருள்; அவளும் பெண்தான்.

விருந்தினர்களை யெல்லாம் அழைத்து வந்து, ஹரிஹரன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தான். உண்மையில் விருந்து யாருக்காக என்பதைப் பவானி உடனே கண்டுகொண்டாள். ஹரிஹரனின் கண்களே திரும்பத் திரும்ப வட்டமிட்டு அதை வெளிப்படுத்தி விட்டன. அந்தப் பெண்ணுக்கு வயசு பதினெட்டு அல்லது பத்தொன்பதுதான் இருக்கும். பளிச்சென்று இருந்தாள். கருணையான கண்களாலேயே அவள்—நிர்மலா என்று பெயர்—பவானியைப் பார்த்தாள். பவானியின் உள்ளம், 'இந்தப் பச்சைக் குழந்தையிடமா? முப்பத்தைந்து வயசிலா?' என்று எண்ணமிட்டது.

பவானி, நோயாளி என்பதைப்பற்றி அவர்கள் யாருக்கும் சந்தேகம் இல்லை. அவளைப் பார்த்தாலே கன்னம்

ஒட்டிக் கண்கள் குழிவிழுந்து எலும்பும் தோலுமாக இருந்தாள். அவளுக்குக் காசநோய் இல்லையென்றால் அது நிச்சயம் காசநோயின் தவறுதான்.

கீழே சாப்பாட்டுக்கு முன் நடுஹாலில் உட்கார்ந்து எல்லோரும் பேசிக்கொண் டிருந்தார்கள். மாடியில் தன் அறையில் பவானி ஆவலுடன் துடிக்கும் உள்ளத்தோடு கதவையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

அறைக்குள் நுழைந்தாள் காத்தாயி—தனியாக.

"காத்தாயி, அவன் எங்கே?"

அந்தக் கண்களைப் பார்க்கவே காத்தாயிக்குத் தைரியம் வரவில்லை.

"என்ன? சொல்லேன். ரகுவை ஏன் அழைத்து வரவில்லை?"

"என்னம்மா சொல்வேன்? ஐயா வந்து வந்து..." காத்தாயி எச்சிலை ஒரு தரம் கூட்டிக்கொண்டு விழுங்கினாள்; "குழந்தை எல்லாரோடும் அங்கே இருக்கணும்னு வெச்சினுட்டாரு. அம்மா, அழாதீங்கம்மா."

பவானியின் தலை, தலையணையில் புதைந்திருந்தது. அவள் உடல் குலுங்கிக்கொண் டிருந்தது.

"உங்களுக்கு கொஞ்சமானும் ஆறுதலா யிருக்குமோன்னுதான்..."

அழுது சிவந்த கண்களை உயர்த்திப் பவானி வேலைக்காரியின் அன்பு ததும்பும் முகத்தைப் பார்த்தாள்.

"...இவனைக் கூட்டிவந்தேனம்மா..."

கதவின் வெளியே கையை நீட்டிக் காத்தாயி ஒரு சிறிய உருவத்தை உள்ளே இழுத்தாள்.

இந்தக் கருணைக்கு நன்றி கூறவேண்டித் தன் துன்பத்தை அடக்கிக்கொண்ட பவானி, "வாடா முத்து. சௌக்கியமாயிருக்கிறாயா?" என்றாள்.

8

நேரம் செல்லச் செல்லப் பொறுமையை இழந்தாள் அவள். தன் சொந்தக் குழந்தையைக்கூட அவள் விருப்பம் போல் சீராட்டக் கூடாதா? அதுதான் போகட்டும்; விரும்பியபோது பார்க்கவும் கூடாதா? இதென்ன கொடுமை! திடீரென்று அவளுக்கு, தான் எதற்காக இந்தக் கொடுமையைப் பொறுத்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று தோன்றியது. வாழ்க்கை என்பது என்ன? பிறர் ஆட்டி வைத்தபடி ஆடுவதுதானு? தனக்காக வாழவே கூடாதா?

வற்றியிருந்த அவள் உடல் எங்கிருந்தோ பலம் பெற்றுச் சட்டென்று எழுந்து நின்றது.

நர்ஸ் ஓடிவந்து அவளைப் பிடித்துக்கொண்டாள். "என்னம்மா இது?"

"என்னைத் தடுக்காதீர்கள், அம்மா. ரகுவைப் பார்க்க வேண்டும்போல் ரொம்ப ஆசையாக இருக்கிறது. அவன் எங்கிருந்தாலும் தூரத்திலிருந்தே பார்த்துவிட்டு உடனே வந்துவிடுகிறேன்."

ஆவலினுல் மூச்சு இரைக்க, ஏக்கத்தின் தகிப்பினுல் உருவாய ஓர் எலும்புக்கூட்டால் அவள் நடந்து சென்ருள்.

கீழே, நடு ஹாலிலிருந்தே மாடிப்படிகளின் துவக்கம். பாதித் தூரம்வரை அங்கிருப்பவர்களால் படிகளைப் பார்க்க முடியும். பிறகு படிகள் ஒரு திருப்பத்துடன் மாடியை நோக்கிச் சென்றன. திருப்பத்திற்கு மேல் இருந்த படிகளை ஹாலில் உள்ளவர்கள் காண முடியாது. மாடியில் படிகள் ஒரு வராந்தாவில் போய் முடிந்தன. பவானி - இந்த வராந்தாவை நெருங்கியவள் - சட்டென்று பின்வாங்கி ஒதுங்கிக்கொண்டாள். வராந்தாவில் ஹரிஹரனும் நிர்மலாவும் பேசிக்கொண் டிருந்தார்கள்.

"நிர்மலா, அவளை நீதான் நேரிலேயே பார்த்தாயே. இன்னும் எவ்வளவு நாள் உயிரோடிருப்பாள். பாவம்!"

நிர்மலாவின் பால்வடியும் முகம் பரிதாபத்தினால் இன்னும் சோபையுற்றது. "எனக்குக்கூடக் கஷ்டமாக இருக்கிறது. அவர்களுடைய சிநேகம் எனக்குக் கிடைத்தால்...?"

"உனக்கு ஏன் அந்தப் பாடு? நீ சின்னஞ் சிறியவள். என்னைப் பார்த்தால்கூட உனக்குக் கிழவன் மாதிரிதான் இருக்கும்; இல்லே?"

ஹரிஹரன் சாமர்த்தியமாகச் சற்று நிறுத்தினான். அவன் எதிர்பார்த்த பலன் கிடைத்தது. நிர்மலா தலையை வேகமாக ஆட்டியபடி, "இல்லே, இல்லே. நான் அப்படி நினைக்கவே இல்லே" என்றாள்.

ஊரை மயக்கிய தன் முகவாட்டத்துடன் ஹரிஹரன் பேசினான்: "உம், என்னவோ சொல்கிறாய். கூடிய சீக்கிரம் நான் மனைவியை இழந்து மன்றாடும் ஒரு பைத்தியக்காரன் ஆகிவிடுவேன். வீட்டில் லட்சுமீகரம் போய்விடும். ரகு தாயற்றவன் ஆகிவிடுவான். எனக்கு அப்புறம் யார் கதி?"

நிர்மலா இன்னதென்று விவரிக்க முடியாத கருணையோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஹரிஹரன் அவள் கையைப் பிடித்துக்கொண் டிருந்தான். அவள் பேசவும் இல்லே, கையை விலக்கிக்கொள்ளவும் இல்லே.

பவானிக்குப் பொறுமை தோன்றவில்லே. நிர்மலாவைக் குறித்துப் பரிதாபமே மேலோங்கியது. தன் மறைவிடத்திலிருந்து வெளிவந்து அவளை எச்சரிக்க நினைத்தாள். அதே சமயம், "அதோ அப்பா!" என்ற மழலைக்குரல் கேட்டது.

பவானி தான் சொல்ல வந்ததை மறந்து ஆவலால் துடித்தாள். ஹரிஹரன் படிகளின் பக்கம் கண்களைத்

திருப்பினுன். "என்னடா ரகு, இங்கேயா விளையாடிக் கொண்டிருக்கிருய்? சரி, வா நிர்மலா, கீழே போகலாம்."

அவர்கள் இருவரும் கீழே இறங்கிப் போனதும் பவானி ஓடி வந்து பார்த்தாள். மாடிப்படிகளில் திருப் பத்தில் இருந்த படிமேல் உட்கார்ந்து ரகு சில பொம்மைக ளோடு விளையாடிக்கொண் டிருந்தான்.

பவானி சற்று நேரம் பார்த்துக்கொண்டே நின்ருள். அவள் இருதயம் இன்பத்துடனும் ஏக்கத்துடனும் பொங்கி வந்தது. தாவிச் சென்று குழந்தையை எடுத்து அணைத்துக் கொள்ள அவள் உடலெல்லாம் துடித்தது. ஆனுல் அவன் கத்திவிடுவான், ஹாலில் உட்கார்ந்திருப்பவர்கள் பார்த்து விடுவார்கள், கணவன் ரகுவைப் பிடுங்கிக்கொண்டு தன் னைத் திட்டி உள்ளே அனுப்பிவிடுவான். ஆகவே பரிவோடு குழந்தையைப் பார்த்துக்கொண்டே அசையாமல் மௌன மாக நின்ருள். உள்ளத்தில் ஒருவித நிம்மதி தோன்றியது.

தனக்குத் தானே ஏதேதோ குழந்தைப் பாஷையில் பேசிக்கொண்டு பொம்மைகளை வரிசையாக அடுக்குவதும் மறுபடியும் கலைப்பதுமாக இருந்தான் ரகு. அப்படி இருந் தவன் விளையாட்டில் ஒரு பொம்மையிடம் "பாப்பா, நான் ஷூட் பண்றேன் பாரு!" என்று கூறித் தன் கைகளை ஒன்ருக இணைத்து முகத்துக்குச் சற்றுத் தூரத்தில் வைத் துக்கொண்டு மாடியின் திக்கில் குறி பார்த்துத் தலை நிமிர்ந்தான்.

அவன் புன்னகை மறைந்தது. மருண்ட விழிகளுடன் அன்னையைப் பார்த்தான்.

பவானியின் புன்னகை இன்னும் மலர்ந்தது. தாய்மை யின் கட்டுப்பட்ட அன்பெல்லாம் ஓர் உருவமாகி அந்த எலும்புக்கூடாக நின்றதுபோல் தோன்றியது. பவானி, கரங்களை நீட்டிக்கொண்டு பரிவு ததும்பும் முகத்தினளாய் மெதுவான குரலில், "எங்கிட்ட வரயா?" என்ருள்.

ரகு அலண்டுவிட்டான். தாய் என்ற பெயர் மட்டுமே அவனுக்குப் பரிசயம். தாயிடம் போகக்கூடாது என்று அவனுக்குக் கண்டிப்பான உத்தரவு இருந்தது. மேலும், பவானியின் தோற்றம் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. தலையை ஆட்டிக்கொண்டு, "மாட்டேன்!" என்றவாறு வேகமாக எழுந்தான். கலவரத்தில் படியின் ஓரத்தில் காலை வைக்கப் போய்விட்டான். வைத்திருந்தால் உருண்டு கீழே விழ வேண்டியதுதான். ஒருகணம் சாய்ந்தேவிட்டான். அடுத்த விநாடி பவானியின் கரங்கள் அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டன.

குழந்தை இப்போது பயத்துடன் ஆச்சரியமும் கொண்டவனாக அவளை நிமிர்ந்து நோக்கினான். பவானி அவனை இறுகத் தழுவிக்கொண்டாள். ஹாலில் இருந்தவர்கள் கண்முன் இந்தக் காட்சி தோன்றவே அனைவரும் அதிர்ச்சியுற்று எழுந்து நின்றார்கள். திக்பிரமை நிறைந்த பல கண்கள் அவளை நோக்கின.

ஹரிஹரன் கண்களில் தீப்பொறி பறந்தது.

பவானி இதைக் கண்டாள். சலனமற்றிருந்தது அவள் முகம். மற்றவரைத் தலைகுனியவைக்கும் கம்பீரமான நிதானத்துடன் தன் கரங்களை விலக்கிக்கொண்டு, ரகுவை ஒரு தரம் பார்த்துவிட்டு மாடியை நோக்கிப் படி ஏறினாள்.

வெறுப்பைத் தந்த அந்த விநாடி அப்போதுதான் வந்ததா?

9

அன்றிரவு தன் படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள் பவானி. அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. குழந்தையை அணைத்துக்கொண்டபோது அவள் உயிர் அநுபவித்த இன்பத்தை நினைத்து நினைத்து

வெதும்பிக்கொண் டிருந்தாள். அந்த இன்பத்தை எவ்வளவு அரிய பொருளாக்கிவிட்டான் அவள் கணவன்! அவள் ஏன் இன்னும் பொறுத்துக்கொள்ள வேண்டும்? ஹரிஹரனுக்கு என்னவோ குழந்தைப்பாசம் இல்லை. பின் அவள் குழந்தையுடன் எங்கேயாவது போய்விட்டால் தான் என்ன?

மணி பத்து இருக்கும். கீழே இன்னும் இரண்டொரு விருந்தாளிகளின் குரல் கேட்டது. நிர்மலா இருந்தாள் போல் தோன்றியது.

அவளைப்பற்றிய வருத்தம் வேறு, இன்று பவானியை வாட்டிக்கொண் டிருந்தது; அவளுடைய அகன்ற துயரக் கடலில் இன்னும் ஒரு துளி.

அங்கும் இங்கும் நிலைகொள்ளாமல் பாய்ந்துகொண் டிருந்த அவள் கண்கள் திடீரென்று தடைப்பட்டு நின்றன; சொல்ல முடியாத வியப்பினால் விரிந்தன.

ரகு, தன் விளையாட்டுத் துப்பாக்கியை ஒரு கையில் பிடித்துக்கொண்டு கதவருகில் நின்றான். ஆராய்ச்சி நிறைந்த கண்களால் அவளை நோக்கினான்.

சிறிது நேரம் அறையில் பூர்ண நிச்சப்தம் நிலவியது. நர்ஸ் கடைசியாக, "இந்தாப்பா குழந்தை, நீ இங்கே வரக் கூடாது" என்றாள் ரகுவைப் பார்த்து.

எதிர்பாராத இன்ப லாகிரி தடைப்பட்டுப் பவானி திடுக்கிட்டாள். "நர்ஸ் அவனை விரட்டாதீர்கள். சொப் பனம்போல் அல்லவா இருக்கிறது! இது என்ன அதிசயம்! ......இதைக் கலைக்கவேண்டாம், தயவுசெய்து......"

தாயின் ஏக்கமும் வேதனையும் ரகுவுக்குப் புரியவில்லை. ஆனால் அவன் தன்னைப் பிடித்த நர்ஸின் கரங்களிலிருந்து திமிறிக்கொண்டு, "என்னை விடு" என்றான். நர்ஸ், அதிசயத்துடன் செயலற்று நின்றுவிட்டாள்.

தாயும் மகனும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருந்தார்கள். பவானியின் கண்களில் நீர் நிறைந்தது. மிருதுவான குரலில், "கிட்டே வாடா" என்றாள்.

ரகு தலையை ஆட்டி, "ஊஹூம்" என்றான். ஆனால் மாலையில் அலண்டதைப்போல் இப்போது அவன் அலண்டுவிடவில்லை. பேசாமல் நின்றுகொண்டு பவானியை யோசனையோடு, ஆராய்ந்தான்.

"ஏய்!" என்றான் கடைசியாக.

பவானிக்கு அழுகையே வந்துவிட்டது. "ரகு, நான் உன் அம்மாடா! 'அம்மா' என்று என்னைக் கூப்பிடக் கூடாது என்றுமா சொன்னார் உன் அப்பா?"

"நீ இன்னிக்கு என்னைப் பிடிச்சுண்டயே!"

"உனக்கு அது பிடிக்கவில்லையா?"

"நீ பிடிச்சுக்காட்டா நான் விழுந்திருப்பேன். கீழே விழறதுன்னா எனக்கு ரொம்பப் பயம்."

"நான் இருக்கச்சே நீ ஏண்டா விழணும்?" பவானி மெள்ள எழுந்து அவனருகில் வந்து அவனைத் தன்னுடன் அணைத்துக்கொள்ள முயன்றாள்.

ரகு ஒதுங்கிக்கொண்டான். "ஊஹூம். நீ என்னைத் தொடக்கூடாதுன்னு அப்பா சொல்லியிருக்கார்."

"ஏன் கூடாது? உன்னை என் உடம்புக்குள்ளேயே வைத்திருந்தேனே; இப்போது தொட்டால் என்ன ஆய் விடுமாம்?"

ரகுவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"உன் உடம்புக்குள்ளேயா? அப்போ நான் மூச்சுவிட முடியாமே செத்துப்போனேனா?"

"இல்லை. நான் மூச்சுவிட்டேனே; அதனாலே நீ உயிரோடு இருந்தாய். உனக்கும் எனக்கும் ஒரே ரத்தம். ஒரே உயிராக இருந்தது."

"அப்பாவுக்கு?"

"அப்பாவுக்கு எல்லாம் வேறேதான்."

"அப்பாவை வையறயே!"

"வையலேடா. நீயே பாரு, அப்பா வேறேயா இல்லையான்னு. இல்லையென்றால் உன்னையும் என்னையும் வேறே வேறேயாப் பண்ணி ஒத்தரை ஒத்தர் தொடக்கூடாதுன்னு சொல்லுவாரா? நான் என்ன கெட்டவளா, நீ சொல்லு. உனக்கு அடிபடாமல் பிடிச்சுக்கலையா நான்?"

ரகு முகமலர்ச்சியுடன், "ஆமாம். அப்பா சொன்ன மாதிரி நீ கெட்டவளா இல்லாம நல்லவளா இருக்கியேன்னு தான் உன்னைப் பார்க்கணும்னு வந்தேன்" என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்கவே எத்தனையோ துன்பத்தைச் சகித்துக்கொள்ளலாமே என்று எண்ணினாள் பவானி. 'வாழ்வில் குழந்தை, குழந்தை, குழந்தை! வேறொன்றுமே கிடையாதா?' என்று அவள் எத்தனையோ தரம் தன் கணவனின் மிருகத்தன்மையை நொந்தபோது எண்ணியதுண்டு. இன்று, 'இந்தக் குழந்தையால்தானே வாழ்வில் முதல் முதலாகச் சந்தோஷத்தை உணர்கிறேன்?' என்று நினைத்தபோது அவள் உடல் புல்லரித்தது.

"ரகு, கண்ணு, என்னை அம்மான்னு கூப்பிடு, பார்க்கலாம்" என்றாள் தழுதழுத்த குரலில்.

ரகு தயங்கிக்கொண்டே அவளை ஒரு மாதிரி பார்த்தான். "எனக்கு......உன்னைப் பார்த்தால்......பயமாயிருக்கே!"

அந்த நிமிஷம் பவானி அடைந்திருக்கவேண்டிய வேதனையைக் கற்பனை செய்த நர்ஸ், உள்ளம் கூசித் தலை குனிந்தாள்.

வறண்ட விழிகளுடன் பவானி ரகுவைப் பார்த்தாள். அவள் தேகம் பதைத்துக்கொண்டிருந்தது.

"ரகு, நீ என்னை அழகாப் பண்ணத்தாண்டா நான் காத்துண் டிருக்கேன்" என்றாள் உடைந்த குரலில்.

அந்தக் குரல் குழந்தையை என்ன செய்ததோ? தன்னையும் அறியாமல் அவள் அருகில் வந்தான். பவானி அவனை வாரி அணைத்துக்கொண்டாள். அவள் அன்புப் பிரவாகத்தில் அவன் திக்கு முக்காடினான். கண்களில் நீருடனும் முகத்தில் முறுவலுடனும் பவானி அவனை ஆசை தீரக் கொஞ்சிச் சீராட்டினாள். அவள் இருதயத்தில் கண்ணீர், களிப்பு இரண்டும் கொந்தளித்தன.

குழந்தையின் முகத்தை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு அவன் நெற்றியில் மெதுவாக முத்தமிட்டாள்.

"ரகு, இப்போதுகூட என்னைப் பார்த்தால் உனக்குப் பயமாயிருக்காடா?"

"இல்லை, நீ முத்தம் கொடுத்தவுடனேயே எல்லாப் பயமும் போயிடுத்து."

தன் கையில் இருந்த விளையாட்டுக் கருவியை நழுவ விட்டு, ரகு இரு கரங்களாலும் அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டான். பவானியின் உயிர் பொங்கித் துடித்தது. கண்ணீரின் இன்ப வெள்ளத்தில் அவளுடைய ஜீவியக் கசப்பெல்லாம் கரைந்தது.

"ரகு!"

"அம்மா!"

அந்த ஒரு சொல் ஓர் இன்பநாதமாக உருக்கொண்டு அவள் ஆத்மாவில் ரீங்காரம் செய்தது. "அம்மா...... அம்மா......அம்மா......"

"பவானி, என்ன இது?"

அவள், தன் இன்ப உலகத்திலிருந்து வெளிப்படுமுன் ஹரிஹரன் அவர்கள் இருவரையும் பிரித்துவிட்டு ரகுவைத் தன்னிடம் இழுத்துக்கொண்டான்.

ஆனந்தக் கண்ணீருக்கிடையே பவானி தலைநிமிர்ந்து கணவனை நோக்கினாள். அவன் உருவம் ஏதோ மங்கலாக, முக்கியம் இல்லாத ஒரு பிண்டமாக, அந்த இன்பத் திரைக்குப் பின் காட்சி அளித்தது. அவள் மெதுவாகச் சிரித்தாள்.

ஹரிஹரன் கோபத்துடன் நர்ஸைப் பார்த்தான்; "என்ன இது? இவர்கள் இருவரையும் அண்டவிடக் கூடாதென்று நான் சொல்லியிருந்தது என்ன ஆயிற்று?"

நர்ஸ் கையைப் பிசைந்தாள். "எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பிரமை பிடித்ததுபோல்......"

"அப்படியா சமாசாரம்? கடமையைச் செய்யும் அழகு இதுதானா? சரி, அதைப்பற்றிப் பின்னால் பேசிக்கொள்கிறேன். நீங்கள் கீழே போகலாம்."

குனிந்த தலையுடன் நர்ஸ் அறையினின்று வெளியேறினாள். ஹரிஹரன் கோபமிகுதியுடன் மனைவியைப் பார்த்து விழித்தான். "ரொம்ப நன்றாயிருக்கிறது, பவானி! குழந்தைக்கு உன் வியாதியைக் கொடுக்கப் பார்க்கிறாயா?" மிகுந்த அலட்சியத்துடன் அவனை ஒருதரம் பார்த்துவிட்டு, பவானி நிதானமாகத் தன் படுக்கையில் சென்று உட்கார்ந்துகொண்டாள்.

"மனுஷன் கேட்டால் பதில் சொல்வதற்கு என்னவாம்?"

'மனுஷனா?' பவானியின் முகத்தில் இளநகை அரும்பியது. ஹரிஹரன் இன்று அவள் கோபத்துக்கும் வெறுப்புக்குங்கூடப் பாத்திரம் அல்லாத அற்பப் பொருளாகிவிட்டான். அதன் காரணமும் அவளுக்குத் தெரியும்.

பயந்த பார்வையுடன் தந்தையின் பிடிக்குள் சிக்கியிருந்த ரகுவைப் பார்த்தாள். குழி விழுந்த கண்கள் கம்பீரமாகப் பிரகாசித்தன. மறுபடியும் புன்னகை செய்தாள்.

"நீங்கள் மனுஷன். ஆனால் உங்களைப் பொறுத்த வரையில் நான் மட்டும் மனுஷி அல்ல, அப்படித்தானே? ஆனால் மனுஷி ஆவதற்கே நான் காத்துக்கிடந்தேன். இன்று மனுஷியின் வெற்றி ஏற்பட்டுவிட்டது."

அவள் அமைதி அவனைப் பின்னும் ஆத்திரப் படுத்தியது.

"என்ன உளறுகிறாய்? வெற்றியாவது தோல்வி யாவது? உன் காரியம் வர வரக் கொஞ்சமும் நன்றாயில்லை. ஏதோ நோயாளியாயிற்றே என்று பார்த்தால்......"

"யார் நோயாளி?"

அவள் குரலில் கோபம் தொனிக்கவில்லை. ஆனால் அதன் தீர்மானம் அவனை உலுக்கிவிட்டது.

"எனக்கு நோய் எதுவும் இல்லை. என்னை விலக்கி ஊரில் நல்ல பெயர் எடுத்து, உங்கள் மனம்போல் ஆட்டம் போடுவதற்கு நல்ல சாக்குக் கண்டுபிடித்தீர்கள். நான் இன்று ரகுவைக் காப்பாற்றப் படிகளின்மேல் ஓடி வந்தது தான் உங்களுக்குக் கோபம்; இல்லையா? படுக்கையை விட்டு எழுந்திருக்கக்கூடப் பலமில்லாத நோயாளி என்று அவர்களிடம் சொல்லியிருந்தீர்கள். அவள் எப்படி அவ் வளவு தெம்புடன் கண்மூடித் திறப்பதற்குள் ஓடிவந்து குழந்தையைப் பிடித்துக்கொண்டாள்? அவர்களுக் கெல்லாம் என்ன பதில் சொன்னீர்கள்? தாயன்பின் மகிமை என்றீர்களா?"

ஏளனத்தில் கலந்துவிட்ட அந்த வெறுப்பின் எல்லை யைப் பார்க்க அவனுக்கே கண் கூசியது. அவன் ஆத்திரம் கட்டுக்கு அடங்கவில்லை.

"கன்னா பின்னா வென்று பேசாதே......"

"இத்தனை கோபம் எதற்கு? இன்னும் நான் என்ன, பதினெட்டு வயசுப் புதுமணப் பெண்ணா, உங்கள் கோபத் தைக் கண்டு நடுங்க? நம்பிக்கையும் இன்பமும் மட்டுமா

என்னை விட்டுப் போயின? கூடவே பயமும் போய்விட்டது. உங்கள் கொடுமை தொடமுடியாத தூரத்தில் இப்போது இருக்கிறேன்."

"உஷ், பவானி, வெளியே ஏதோ அடியோசை கேட்பதுபோல் இருக்கிறது" என்று சொல்லிக் கதவுக்கு வெளியே எட்டிப் பார்க்கும் நோக்கத்துடன் ஹரிஹரன் நகர்ந்தான்.

"அந்தப் பெண்ணை அடைந்துவிடலாமென்று நினைக்காதீர்கள்!"

பவானியின் இந்தச் சொற்கள் அவனை மின்னலைப் போல் தாக்கின. அவன் மற்ற எல்லாவற்றையும் மறந்து நின்று அவளைப் பார்த்தான்.

"என்ன உளறுகிறுய்?"

"உங்கள் வயசு என்ன? அவள் வயசு என்ன? உலகத்தின் சூதுவாதுகளை அறிய முடியாத சிறுமியுடனு உங்கள் நாடகத்தை நடத்துகிறீர்கள்? நான் அவளைக் கட்டாயம் எச்சரிக்கப் போகிறேன். 'அம்மா நிர்மலா! நீ என்னைப் பார்த்து உன் வருங்கால விதியைத் தெரிந்துகொள்' என்பேன். 'அவரைக் கல்யாணம் செய்துகொண்டால் என்ன ஆகும் என்பதை நான் விட்ட கண்ணீரையும் நான் இழந்த ஆரோக்கியத்தையும் கேட்டுத் தெரிந்துகொள்' என்பேன்."

வெகு நேரம் வாய் பேசாமல் அவளைப் பார்த்தபடி உணர்ச்சிகளுடன் போராடிக்கொண்டிருந்தான் ஹரிஹரன். பவானி இன்னும் அதே புன்னகையுடன் அமைதியாக உட்கார்ந்திருந்தாள். அவள் கண்களில் நிரந்தரமாய்க் குடிகொண்டிருந்த துயரத்துக்குப் பதில் ஒரு சோபை விளங்கியது. நீர் குடித்துக் களைப்புத் தீர்ந்த பிராணியை அவள் ஒத்திருந்தாள்.

மூச்சு இரைக்க, ஆத்திரத்தால் கரகரக்கும் குரலில் பேசினான் ஹரிஹரன்: "நீ அவளைப் பார்க்க முடியாது. நான்கு நர்ஸ்கள் உன்னைச் சதா சுற்றியிருக்கும்படி செய்கிறேன். நீ உன் படுக்கையை விட்டே இனிமேல் எழுந்திருக்கச் சந்தர்ப்பம் இல்லாமல் செய்துவிடுகிறேன்."

பவானி, மெதுவாகச் சிரித்துவிட்டுப் படுக்கையில் படுத்துக்கொண்டாள். சலனமற்ற விழிகளால் மேலே பார்த்துக்கொண்டே அமைதியாகப் பேசினாள். "இனி உங்கள் கட்டுக்காவல்கள் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. சிறையில் அடைபட்டாலும் சிறைக்கதவுகளைப் பிளந்துகொண்டு வெளியேறும் பலத்தை இன்று பெற்று விட்டேன். இந்தப் பலத்துக்கு முன் உங்கள் விலங்குகள் தாமே அறுந்து விழுந்துவிடும்."

கண்களைத் திருப்பி அவள் ரகு இருந்த பக்கம் நோக்கினாள். பார்வையும் குரலும் மனமும் கனிந்து முழுச் சாந்தியின் வலிமையுடன் பேசினாள்: "நான் வென்று விட்டேன். உங்கள் ஜாக்கிரதை வீணாகிவிட்டது. என் குழந்தை இன்று என்னைத் தேடி வந்தான். அம்மா என்று அழைத்தான். என் அன்பை உணர்ந்தான். நான் வெற்றி பெற்றுவிட்டேன்."

ஹரிஹரனின் முகத்தில் ரத்தம் ஏறியது.

பவானி கடைசியாகக் கூறினாள்: "என் குழந்தையுடன் இனி நான் சகஜமாகப் பழகப்போகிறேன். உங்கள் கொடுமையை இனிமேல் பொறுக்கமாட்டேன்."

ஹரிஹரனின் புருவங்கள் நெரிந்தன. அவன் கோபத்தின் உருவமானான்.

"உன்னை இரண்டே நாட்களில் வேறு ஊரில் வீடு பார்த்து ஒதுக்கிவிடுகிறேன். அப்போது நீ யாரை எப்படிச் சந்திக்கிறாயோ, பார்க்கலாம். இவனாலா இத்தனை துணிச்சலும் அகம்பாவமும் உனக்கு வந்தன?" தன்

ஆத்திரம் முழுவதையும் சேர்த்துப் பல்லைக் கடித்துக் கொண்டு குழந்தையின் முதுகில் ஓர் அறை வைத்தான் ஹரிஹரன். அலண்டு எழுந்த மனைவியின் முகத்தைப் பாராமலே, கதறும் குழந்தையை இழுத்துக்கொண்டு அறையை விட்டு வேகமாக வெளியேறினான்.

10

தாங்க முடியாத உள்ளக் கொதிப்புடன், பவானி தன்னை ஊருக்கு அனுப்பும்பொருட்டுச் செய்யப்படும் ஏற்பாடுகளைக் கவனித்தாள்.

வேண்டிய சாமான்களை யெல்லாம் ஹரிஹரன் முதலிலேயே 'குட்ஸ்'வண்டியில் அனுப்பிவிட்டான். அவள் உடல் சௌகரியத்துக்கு வேண்டிய எந்தப் பொருளிலும் அவன் குறை வைக்கவில்லை. தொங்கிய முகத்துடன் நண்பர்களிடம், ''வைத்தியர் என் மனைவியை வேறு நல்ல சீதோஷ்ண நிலையுள்ள ஊருக்கு அனுப்பும்படி சொல்லியிருக்கிறார். நான் அவளை இந்தப் பத்தாம் தேதி கோயம்புத்தூருக்கு அழைத்துப்போகிறேன். உம், என்ன செய்யலாம்?'' என்று பெருமூச்சுவிட்டான்.

மனைவியிடம் அவனுக்குள்ள அன்பால் நெஞ்சுருகி அவர்கள், ''ஒன்றும் கவலைப்படாதீர்கள். எல்லாம் சரியாகிவிடும்'' என்றார்கள்.

''தகுந்த ஆட்களை அங்கே நியமித்திருக்கிறேன். இங்கேயிருந்து நர்ஸும் கூடவே வருகிறாள். நான் கொண்டுபோய் விட்டுத் திரும்பி வரவேண்டும்.''

'இவ்வளவு அன்பான கணவன், மனைவியின் பிரிவை எப்படிச் சகிப்பான், பாவம்!' என்று அவர்கள் உள்ளுக்குள்ளேயே வருந்தினார்கள்.

பவானியின் உள்ளம் கொதித்தது.

தன்னைத் தன் குழந்தையிடமிருந்து—தன் இன்பத்திடமிருந்து–பிரிக்கவே கடைசியில் சதி செய்யும் கணவனை எண்ணியபோது அவள் இருதயம் கட்டுக்கு அடங்காத ஆத்திரத்தால் பொங்கியது. ஆயிற்று, ஏற்பாடுகள் துரிதமாகிக்கொண் டிருந்தன. அவள் கிளம்பவேண்டிய நாள் நெருங்கியது. வாழ்வில் சுகத்தைச் சுவைக்கத் தனக்கு இருந்த ஒரே மார்க்கமும் சிறிது சிறிதாக அவள் கண் முன்னுலேயே மூடப்பட்டு வந்தது. உணர்ச்சி மிகுதியால் அவளுக்கு இரைப்பு அதிகமாயிற்று. கண்கள் முன்பை விட அதிகமாகப் பிதுங்கி ரத்தக் கோடுகளுடன் தெரித்து விழுவனபோல் அந்த எலும்புக்கூட்டில் இயங்கின. செய்வதறியாமல் உதட்டைக் கடித்துக்கொண்டும் கைகளால் முகத்தைப் புதைத்துக்கொண்டும் தன் படுக்கையில் விழுந்துகிடந்தாள் பவானி.

ரகுவை அந்தத் தினத்துக்குப் பிறகு அவள் பார்க்கவில்லை. வழக்கம்போல் நர்ஸ் அருகிலேயே இருந்தாள். ஆனுல் இது ஒன்றையும் பவானி இப்போது நினைக்கவில்லை. தன் கண்முன் விரியும் நிரந்தரத் துயரத்தின் கோரக் கைகளையே அவள் பார்த்தாள்; பார்த்துத் துடித்துத் தனக்குள்ளேயே கதறினுள்.

'ஐயோ! இந்த நரகம் எனக்கு வேண்டாம். நான் எப்படியாவது இதனின்று தப்புவேனு? என் வாழ்வின் ஒரே இன்பத்தை இழக்கமாட்டேன்; ஐயோ! இழக்க மாட்டேன்!'

11

அன்று அவள் அறையின் வாயிற்படியில் வேலனும் காத்தாயியும் நின்று அவளுடன் பேசிக்கொண் டிருந்தார்கள். மயக்கமுற்றவள் மேல் குளிர்ந்த நீர்த்துளிகள்

தெறிப்பதுபோல் அந்தத் துன்ப நிலையில் அவளை அவர்களுடைய அன்புமொழிகள் சற்றுக் குளிர்வித்தன.

ஹரிஹரன் உள்ளே வந்தான்.

"என்ன வேலா, காத்தாயி, அம்மா ஊருக்குப் போகிறுளே என்று பேசிக்கொண் டிருக்கிறீர்களா ?"

அவன் புன்னகையைக் கண்டு அவர்கள் இருவரும் பயந்து மௌனமானுர்கள்.

பவானியின் பக்கம் அவன் திரும்பினுன்.

"இவர்கள் இருவரும் உனக்கு ரொம்ப வேண்டியவர்கள்; அல்லவா ?"

பவானி சுட்டெரிக்கும் கண்களால் அவனைப் பார்த்தாள். "உங்கள் உத்தரவுடன் இங்கே வரும்போதெல்லாம் அன்பாக ஒரு வார்த்தை சொல்கிறுர்களே; அதுவும் உறுத்த ஆரம்பித்துவிட்டதா ?"

"சே சே! அவர்கள் எனக்கும் மிகவும் பிடித்தவர்கள் தாம்."

வேலன் இதனுல் சற்றுத் தைரியமடைந்து, "நாங்க ரெண்டு பேரும் அம்மாவோட கூடப் போயி உழைக்கட்டுமுங்களா ?" என்று கேட்டான்.

"எனக்கு என்னவோ அது விருப்பந்தான். ஆனுல் போகிற ஊரில் இரண்டு ஆட்களை என் நண்பர்கள் சிபாரிசு பண்ணி அனுப்பி வைத்திருக்கிறுர்கள். அதனுல் நீங்கள் இருவரும் இன்னும் இரண்டு நாளில் வேறு இடத்தில் ஏற்பாடு செய்துகொண்டால் நல்லது."

காத்தாயியும் வேலனும் துணுக்கமுற்று அவனைப் பார்த்தார்கள். "சாமி, இது உங்களுக்கே நல்லா இருக்குதா ?" என்றுள் காத்தாயி.

"போங்கள் வெளியே."

"போறேம் சாமி, போறேம். ஆனு, தெய்வம் உங்களைக் கேக்காம விடாது."

கோபத்துடன் அவர்கள் இருவரும் வெளியேறினுர்

கள். ஹரிஹரன் மனைவியைப் பார்த்துச் சிரித்தான்.

பவானி, துடிப்பு மிகுந்த கண்களால் அவனைப் பார்த்தாள். நான்குபுறமும் வேடனின் அம்புகளால் சூழப்பட்ட மானின் நிலைமையை அவள் அடைந்து விட்டாள். ஆனால் வெற்றி உள்ளத்துடன் அவளைப் பார்த்துச் சிரித்துக்கொண் டிருந்த ஹரிஹரன் ஓர் உண்மையை உணரத் தவறிவிட்டான்.

வேறு ஒரு வழியும் இல்லாதபோது மான், வேடன் மீதே பாய்ந்துவிடுகிறது.

அவனது ஏளனம் செய்யும் முகத்தைத் துடிப்புடன் பார்த்துக்கொண் டிருந்த பரிதாப விழிகளில் ஒரு தீர்மானம் தோன்றலாயிற்று. இனியும் அந்தக் கணவனுடன் வாழ்வதா? அவன் கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டு துயரத்தை ஏற்பதா? வேண்டாம்; பட்ட கஷ்டங்கள் போதும். தன்னை ஊருக்கு அனுப்புமுன் தானே எப்படி யாவது ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப்போய்விட வேண்டும். எங்கேயாவது வெகு தொலைவில், வாழ்க்கையை எப்படியாவது நடத்திக்கொள்ளலாம். இன்பம் நிறைந்த மனத்தை எந்த லௌகிகக் கொடுமையும் தீண்ட முடியாது. அவள், தன் இன்பத்தை எடுத்துக்கொண்டு போய்விட வேண்டும்; தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட வேண்டும்.

மீளாத அடிமைத்தனம் தன் பார்வையின் முன்னுலேயே எதிர்ப்பாகப் பரிணமித்து விட்டதை ஹரிஹரன் உணரவில்லை.

யுத்தகளத்து வைரிகளைப்போல் இருவரது பார்வைகளும் ஒன்றையொன்று எதிர்த்து நின்றன.

12

எட்டாம் தேதி வரையில் தான் எதிர்பார்த்த தருணம் கிடைக்கப்பெருமல் அவள் சஞ்சலமுற்ருள். தன்னுடன்

கணவன் ரெயிலேறுமுன் தப்பிச் செல்லாவிட்டால் பிறகு விமோசனமே இல்லை. பவானி புழுப்போலத் துடித்துக் கொண் டிருந்தாள். நர்ஸ் அவளை விட்டு அகலுவதே இல்லை. உதவி செய்யக்கூடிய வேலைக்காரத் தம்பதிகளும் நிறுத்தப்பட்டு விட்டார்கள்.

இந்த வேதனையில் அவள் தவித்துக்கொண் டிருந்த போதே எட்டாம் தேதி மாலை அவள் ஊருக்குப் போவதைச் சாக்கிட்டு வீட்டில் பிரிவு உபசாரம்போல் ஒரு விருந்தை ஹரிஹரன் ஏற்படுத்தினன்.

அவன் நண்பர்கள் எல்லாரும் பவானியிடம் தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்தார்கள். இரண்டொருவர் சிறு பரிசுகளும் கொண்டுவந்திருந்தார்கள். நர்ஸ் அவள் கட்டிலின் பக்கத்தில் எந்தப் பணிவிடைக்கும் தயாராகக் காத்து நின்றாள்.

"உங்கள் உடம்பு சீக்கிரம் குணமாகி நீங்கள் சந்தோஷமாகத் திரும்பி வரவேண்டும்."

"என் ஆசையும் அதுதான்."

"உங்களுக்கு எங்கேயும் ஒரு குறையும் இல்லாமல் தான் அவர் பார்த்துக்கொள்வாரே."

"ஆமாம். பார்த்துக்கொள்வார்."

"நீங்கள் இல்லாமல் வீடு வெறிச்சென்று இருக்கும்."

"ரொம்பவும் பாராட்டுகிறீர்கள்."

"அவருக்குத்தான், பாவம், மிகவும் கஷ்டமாக இருக்கும்!"

"ஆமாம், பாவம்!"

"எனக்குத் தெரிந்தவரை இப்படிப்பட்ட அந்நியோந்நிய தம்பதியைப் பார்த்ததே இல்லை."

"பார்த்திருக்க மாட்டீர்கள்."

நிர்மலா அவளை அணுகினாள். என்றையும்விட மிகுந்த கருணை, விழிகளில் பிரதிபலித்தது. "உங்களுடன்

நட்பை வளர்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண் டிருந்தேன். முடியாமல் போகிறது" என்றாள்.

பவானி அவளை அன்புடன் பார்த்தாள். "நானுந்தான் ஆசைப்பட்டுக்கொண் டிருந்தேன், அம்மா. உன்னுடன் தனியாகக் கொஞ்சநேரங்கூடப் பேச முடியவில்லையே என்று எனக்கு எவ்வளவு குறை தெரியுமா?"

ஹரிஹரன் இதைக் கேட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"உங்களுக்கு நான் ஏதாவது செய்ய முடிந்தால் சந்தோஷமாகச் செய்வேன்" என்றாள் நிர்மலா.

பவானி அவளைத் தலையிலிருந்து கால்வரை, தன் பார்வையின் கனிவினால் நீராட்டினாள்.

"நான் எப்போதும் உனக்காகப் பிரார்த்தனை செய்து கொண் டிருப்பேன், அம்மா" என்றாள் மெதுவாக.

"நானும்—உங்களுக்காக" என்றாள் நிர்மலா. அவள் குரலின் துயரத்தை மற்றவர்கள் உணர்ந்து கவனிக்குமுன் தன் வழக்கமான கலகலப்புடன், "நாளைக்கு அடுத்த நாள் இரவு புறப்படுகிறீர்கள், இல்லையா? நாளை எனக்குப் பிறந்த நாள். உங்களையும் மிஸ்டர் ஹரிஹரனையும் பிறந்த நாள் 'பார்ட்டி'க்கு, அழைப்பதாக இருந்தேன். நீங்கள் வர முடியுமா, கொஞ்ச நேரத்துக்காவது?" என்றாள்.

பவானியின் முகத்தில் மாபெரும் துயரத்துக் கிடையில் ஒரு புன்னகை மலர்ந்தது.

"என் உடம்பு நிலைதான் எல்லாருக்கும் தெரியுமே. நான் எப்படியம்மா வருவது? என் ஆசீர்வாதத்தை மட்டும் அனுப்புகிறேன்."

நிர்மலா திரும்பி ஹரிஹரனைப் பார்த்தாள்.

"உங்களால் வர முடியுமா? மூட்டையெல்லாம் கட்ட வேண்டியிருக்குமா? விருந்துக்குப் பின் பேச்சு, இரவு வெகு நேரம் வரை நீடிக்கலாம். மறு நாள் ரெயிலேற வேண்டுமே. வேலை நிறைய இருக்குமா?"

"உனக்குப் பிறந்தநாளா?" ஹரிஹரனின் மூளை வேகமாக வேலைசெய்தது. பவானியும் ஊரைவிட்டுப் போய்விடப் போகிருள். மனைவியைப் பிரிந்தவன் என்ற நிலையில் எல்லாரும் அவனிடம் அதிக அநுதாபம் காட்ட ஆரம்பிப்பார்கள்—நிர்மலா உட்பட. அவள் மனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்வசப் படுத்திக்கொள்ள எவ்வளவு அழகான வாய்ப்பு! அதை நாளையிலிருந்தே தொடங்கி விடலாம். பிறந்தநாளுக்கென்று நிர்மலாவுக்கு மிகவும் விலையுயர்ந்த ஒரு பரிசு அளித்து, முதலில் அவளை நன்றியால் விலக்கு வாங்கிவிட வேண்டும். அவள் குழந்தை உள்ளம் அவன் பரிவைக் கண்டு நெகிழ்ந்துவிடும். பிறகு போகப் போக......

"நான் கட்டாயம் வருகிறேன். நிர்மலா. சாமான்களை எல்லாம் ஏற்கனவே அநேகமாகக் கட்டி யாகிவிட்டது. மீதியை நாளைக்கும் அதற்கடுத்த நாளும் பார்த்துக்கொள்ளலாம். நான் நாளை மாலை ஏழு மணிக்குமேல் வருகிறேன்" என்றுன் நிச்சயமாக.

பவானியின் மூளையில் ஒரு திட்டம் தெளிவற்றதாக முளை விட்டது.

"நீங்கள் வருவதுபற்றி மிகச் சந்தோஷம்; அநேகம் பேர் நாளைக்கு வருவார்கள். உங்கள் மனைவியும் வர முடிந்திருந்தால் நன்றுக இருக்கும்" என்றுள் நிர்மலா.

"ஆமாம்; ஆனல் என்ன செய்வது? அவளுக்குப் பாவம், முழு ஓய்வு இல்லாவிட்டால் பிரயாணமே கஷ்டம்!"

"உங்களுக்கு நாளை அங்கே மனமே லயிக்காது."

"வாஸ்தவந்தான். ஆயினும் உனக்காக வருகிறேன். எந்தக் கடமையை விடமுடியும், சொல்லு?"

"உங்கள் மனைவி எப்போது திரும்பி வருவார்கள்?"

"நாளாகும்; பாவம்! உடல் நிலை நன்றாகக் குணமாகும் வரை இருக்கவேண்டாமா?"

"அதனால்தான் எனக்கு ஒன்று தோன்றுகிறது" என்று அப்போது ஒலித்தது பவானியின் குரல்.

முளை வளர்ந்து செடியாகி விட்டது.

"என்ன?" என்றான் ஹரிஹரன்.

"நர்ஸ் அவ்வளவு நாள் என்னுடனேயே இருக்க வேண்டுமே, பாவம்! அவளை இப்போது வீட்டுக்கு அனுப்பி இன்றும் நாளையும் ஆசைதீரத் தன் மனிதர்களுடன் இருந்துவிட்டு, ஊருக்குப் போகும் அன்று மாலை ரெயிலடிக்கே வரச்சொன்னால் என்ன?"

தன் உள்ளத்தில் இருந்த பரபரப்பை முகத்தில் காட்டாமல் சாதாரணமாக நல்ல மனத்துடன் சொல்லும் ஒரு விஷயம்போலவே பவானி இதைச் சொன்னாள். பிறருக்காகப் பரிந்து பேசும் அவள் குணமும் ஹரிஹரனுக்குப் புதிதல்ல.

ஆயினும், "எதற்கு அதெல்லாம்? அவள் தான் சொல்லிக்கொண்டு வந்துவிட்டாளே!" என்றான்.

பவானியின் உள்ளம் பதறியது. மேலே வற்புறுத்தினால் அந்த விஷயத்தில் தன் வாழ்க்கை இன்பத்தை நிர்ணயிக்கும் முக்கியத்துவம் இருப்பதை அவன் உணர்ந்து கொண்டு விடுவானோ? அவன், வீட்டில் இல்லாத இரவு நேரத்தில் நர்ஸும் இன்றித் தான் தனிமையை விரும்புவது அவனுக்குப் புரிந்துவிடுமோ?—அவள் உதடுகள் துடித்தன.

அந்தத் துடிப்பின் மூலம் அவள் உள்ளத்தின் துடிப்பை ஒருவாறு கண்டுகொண்டு விட்டன, இரு கருணை விழிகள். நிர்மலாவுக்கு அவளது முடிவான உத்தேசம் பிடிபடவில்லையாயினும் அவள் விருப்பத்தைப் புரிந்து

கொண்டாள். வேறு ஒன்றையும் அவள் முக்கியமாக நினைக்கவில்லை.

"உங்கள் மனைவியின் எந்த விருப்பத்தையும் நீங்கள் மறுக்க மாட்டீர்கள்; அவ்வளவு அன்புடையவர் என்றல்லவோ இவ்வளவு நாள் நினைத்திருந்தேன்?" என்ற வார்த்தைகளை வீசினாள்.

ஹரிஹரன் அலண்டுவிட்டான்.

அவ்வளவு பேர் எதிரில் தான் தன் வேஷத்துக்கு முரணாகப் பேசிவிட்டதை நிர்மலா எடுத்துக் காட்டிவிட்டாளே! முதலில் அவளுக்குத் தன்னிடம் உள்ள மதிப்புப் போய்விட்டால்......

"அவள் விருப்பங்களை மறுக்கும் வழக்கம் எனக்கு இல்லை, நிர்மலா. ஏதோ சிறிய விஷயமென்று நினைத்து விட்டேன். அவள் விருப்பம்போலத்தான் ஆகட்டுமே!... நர்ஸ், நீங்கள் இப்போதே போகலாம். அம்மா சொன்னது போல் நாளைக் கழித்து மறுநாள் ரெயிலடிக்கே வந்துவிட்டால் போதும்" என்று அவ்வளவு பேர் முன்னிலையிலும் தன் புகழைக் காப்பாற்றிக்கொண்டு, நர்ஸை உடனே அனுப்பிவிட்டான்.

உண்மையில் மற்றவர்கள் முன்னிலையில், தன் விருப்பத்தை நிறைவேற்றுபவன் என்ற தைரியத்தில்தான் பவானி அந்த விஷயத்தை அங்கே பிரஸ்தாபித்திருந்தாள். தன் ஆசை அழிவதைக் கண்டபோது அவள் அநுபவித்த சித்திரவதை அடுத்த கணமே நிம்மதியாக மாறியபோது உணர்ச்சிப் பெருக்கால் அவளுடைய நெஞ்சு விம்மியது. பேச முடியாத நிலையில் நிர்மலாவைப் பார்த்தாள். இந்தப் பெண் ஏதோ தற்செயலாக அந்த வார்த்தைகளைச் சொன்னாளா அல்லது தன்னுடைய உண்மைநிலையைப் புரிந்து கொண்டு உதவி செய்யும் நோக்கத்துடன் சொன்னாளா? அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் நிர்மலாவின்

அன்பு தேங்கிய கண்களையும் மென்மையே உருவான முறுவலையும் பார்த்தபோது அவள் கண்களில் நீர் திரையிட்டது.

13

சாதாரண மனிதப்பிறவியின் சாதாரண ஆசைகள், ஏமாற்றத்தில் கலந்து உருக்குலைந்தன. ஏமாற்றம் மிகுந்து ஏக்கமாய்க்கதறியது. ஏக்கம், நிறைந்து வழிந்து துயரமாய்ப் படர்ந்தது. கடைசியில் துயரத்தின் எல்லையில் புரட்சி உதயமாகிவிட்டது.

ஊருக்குக் கிளம்பவேண்டிய தினத்துக்கு முந்திய இரவு; ஹரிஹரன் நிர்மலாவின் வீட்டுக்கு அவள் பிறந்த நாள் வைபவத்துக்காகச் சென்றிருந்தான்.

மணி பத்து இருக்கும். காலையிலிருந்தே நிலைகொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்த பவானி, படுக்கையில் புரள்வதை விட்டு எழுந்து உட்கார்ந்தாள். அவள் வாழ்வின் முக்கியமான நேரம் வந்துவிட்டது. பழையதைப் பிளந்து கொண்டு புதியது புகவேண்டிய தருணம் வந்துவிட்டது. வேதனையின் தீர்ப்பாகிய இந்தத் தாண்டுதலுக்கு அவளால் கீழ்ப்படியாமல் இருக்க முடியாது; இருக்கவும் அவள் விரும்பவில்லை. அலை மோதிய நெஞ்சம் எதிரேயுள்ள காரியத்தை எண்ணித் தணிந்து அமைதியின் சக்தியை அவளுக்குத் தந்தது. வாழ்நாள் முழுவதன் துன்பமும் ஏமாற்றமும் கசப்பும் ஆத்திரமும் நான்குவிதப் படைகளாக அவளைச் சூழ்ந்து பலப்படுத்தின; எந்த விதப் பயமும் சஞ்சலமும் தீண்ட முடியாத வஜ்ர கவசத்தின் நான்கு மூலைகளாக அவளைக் காத்து நின்றன. அவளுக்கு என்ன பயம்? தான் செய்துகொண்ட நிவர்த்திக்கமுடியாத இந்தத் தீர்மானத்தால் அவள் இழக்க ஒன்றும் இருக்க

வில்லை. எந்தச் சுகத்தையும் பின்விட்டுச் செல்கிறோம் என்ற தாபம் அவளுக்கு இருக்கவில்லை. துயரத்தின் பலம் கொண்டு புது வாழ்வை இரண்டு எலும்புக் கரங்களால் பறித்து எடுத்துக்கொள்ளவே அவள் எழுந்து வந்தாள்.

பின்கட்டில் சமையற்காரனும் ஒரு வேலைக்காரனும் தூங்கிக்கொண் டிருந்தார்கள். மாடியில் இருந்த கடிகாரத்தின் முள் அவள் இருதயத்தைப்போலவே நிதானமாகத் துடித்துக்கொண் டிருந்தது.

பவானி, தலைப்பை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, பலவீன உடலில் புதுப்பலத்துடன் உறுதியான பாதங்களால் மெள்ளச் சப்தமின்றி மாடிப்படிகளில் இறங்கினாள். கீழே இருந்தது குழந்தையின் அறை. அங்கே அவனுடைய ஆயாவும் இருப்பாள். அந்த ஆபத்துக்கு அவள் பின்வாங்கிவிட்டால் இந்தச் சந்தர்ப்பம் திரும்பக் கிடைக்காது. அப்படியே ஆயா விழித்துக்கொண்டு, கலாட்டா செய்தால் அவளும் பதிலுக்குக் கத்தி அவளை அடக்குவதாகவே இருந்தாள், என்ன இருந்தாலும் அவள் வீட்டு எஜமானி; ரகுவின் தாய். அவனை எடுக்க உரிமையுள்ளவள்.

ரகுவை நினைத்தபோதே அவள் உடல் புல்லரித்தது. உள்ளம் முன்பு ஒரு தரம் அநுபவித்த இன்பத்தை இன்னொரு முறை நினைவினால் சுவைத்தது. அந்த இன்பத்தை இடைவிடாது பருகவே அவள், சமூகத்தில் தன் இடத்தை இழப்பதையும், கையில் காசு இல்லாமல் உலகத்தின் நடுவே அநாதையாகப் பிரவேசிப்பதையுங் கூடப் பொருட்படுத்தாமல் வறண்ட உள்ளத்தை ஏந்திக் கொண்டு வந்துவிட்டாள்.

ரகுவின் அறையை அடைந்தாள் பவானி. ஆயா நன்றாகத் தூங்கிக்கொண் டிருந்தாள். பவானி ஆவலுடன்

உள்ளே சென்று குழந்தையின் படுக்கையைத் தடவினாள். அவன் திடீரென்று வீரிடாமல் இருக்க அவன் வாயைப் பொத்தித் தூக்கிக்கொள்ள விரும்பினவளாய் அவன் தலை எங்கே என்று துழாவினாள்.

திடீரென்று பவானி செயலிழந்து நின்றுவிட்டாள். படுக்கையில் ரகுவைக் காணவில்லை!

கால்கள் துவள அப்படியே படுக்கைமேல் பொத்தென்று உட்கார்ந்தாள் பவானி. அவள் உடலில் வேர்வை ஒரு நொடியில் வெள்ளம்போல் பொங்கி எழுந்தது. கைகள் வெட வெடவென்று நடுங்கின. என்ன நினைப்பதென்றே அவளுக்குப் புரியவில்லை. அவளுக்கு மனச்சாந்தி கிடைக்க முடியாமல் இது என்ன தடை, திடீரென்று அவள் முன் எழும்பியுள்ளது!

ரகு எங்கே போய்விட்டான்? ஹரிஹரன் குழந்தையைக் கூடவே அழைத்துப் போய்விட்டதாக அவள் எண்ணினாள். தலை சுழன்றது. இன்பம் கிட்டும் நேரத்தில் இப்படி ஒரு பேரிடியா? இனிக் குழந்தையை எப்படி அடைவது?

பொங்கியெழுந்த துயரத்தின் பாரத்தில் வெகு நேரம் அழுத்தப்பட்டு அசையாமல் உட்கார்ந்துகொண்டிருந்தாள். வாழ்க்கை அவளுக்குத் திடீரென்று ஓர் அர்த்தமற்ற கேலிக் கூத்தாகத் தோன்றியது. மெள்ள எழுந்தாள். கால்கள் பஞ்சுபோல் துவண்டன. கனவில் நடப்பவள் போல் சுவரைப் பிடித்துக்கொண்டே போய், மாடியில் தன் அறையை அடைந்தாள். படுக்கையில் உட்கார்ந்து தலையை இரு கைகளாலும் தாங்கிக்கொண்டாள். இருதயம் படபடத்தது.

மூச்சுத் திணறும்படி அவளை அமுக்கிப் பிடித்த வேதனை, கடைசியில் கண்ணீராக நெகிழ்ந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி அழலானாள்.

அதே சமயம் மாடியில் இன்னொரு பக்கத்திலிருந்தும் ஓர் அழுகை கிளம்பி அவளுடைய அழுகையுடன் கலந்தது.

14

நிர்மலாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு அவளோடு குழைந்து பேசியவனாக ஹரிஹரன், அவளைத் தனியாக அழைத்துச் சென்று, "உனக்கு ஒரு பரிசு கொண்டுவந்திருக்கிறேன்" என்றான்.

"என்ன அது?"

நீலப் புடைவையில் நட்சத்திரம்போல் ஜொலித்துக் கொண்டிருந்த அவள் பொலிவை அநுபவித்தவாறு ஹரிஹரன் தன் 'நிஜார்' ஜேபியில் கையை விட்டான்.

"அடடா! அதை எடுத்துவர மறந்துவிட்டேன்!"

"சரிதான்; நல்ல பரிசு! நீங்கள் கொண்டுவருவதாக இருந்தீர்கள் என்றே நான் நம்பவில்லை" என்று நிர்மலா பரிகசித்தாள்.

ஹரிஹரனுக்கு ரோசம் வந்துவிட்டது.

"அதென்ன அப்படிச் சொல்கிறாய்? நான் என் அறையில் அதை மேஜைமேல் எடுத்து வைத்தேன். இதோ போய்க் கொண்டுவருகிறேன்."

திடீரென்று நிர்மலாவின் முகம் மாறியது.

"வேண்டாம் வேண்டாம். நாளைக்கு..."

"அதெல்லாம் முடியாது. இப்போதே போகிறேன்."

அவள் மேலும் தடுப்பதற்குள் ஹரிஹரன் அருகில் இருந்த ஒரு நண்பனின் சைக்கிளில் ஏறிக்கொண்டு புறப்பட்டுவிட்டான்.

நிர்மலா ஒரு கணம் கையைப் பிசைந்துகொண்டு நின்றாள். அன்றொரு நாள் விருந்தின்போது ஹரிஹரனும்

பவானியும் வாய்விட்டு நேருக்கு நேரே செய்த வாக்குவாதம் தற்செயலாக மாடிக்குப் போன அவள் காதில் முற்றும் விழுந்துவிட்டது. உண்மை அவளுக்குத் தெரிந்தது. இன்று புருஷனும் இல்லாமல் நர்ஸும் இல்லாதபோது ஒருவேளை பவானி ஆசை தீரத் தன் குழந்தையுடன்-நாளைக்குப் பிரிந்து செல்லவேண்டிய குழந்தையுடன்-கொஞ்சிக்கொண் டிருக்கலாம். அப்போது ஹரிஹரன் அங்கே போய்விட்டால்...? என்ன பெரிய வாக்குவாதம்! என்ன விபரீதம்! தடைப்பட்ட தாயன்பினால் என்ன விளைவு நிகழ்ந்துவிடுமோ!

நிர்மலா தன் காரில் ஏறிக்கொண்டு ஹரிஹரனின் வீட்டுக்குச் செலுத்தலானாள்.

பவானி இடிந்துபோய்த் தன் அறையில் உட்கார்ந் திருந்தபோதுதான் ஹரிஹரன் வீட்டுக்கு வந்தான். நேரே மாடியில் தன் அறைக்குச் சென்றான். விளக்கை ஏற்றி மேஜைமேல் வைத்திருந்த காகிதப் பொட்டலத்தை எடுத்தான்.

பகலில் தகப்பனாரின் அறையில் விளையாடிய நினைவால், பாதித் தூக்கத்தில் எழுந்து ரகு அதே அறைக்குச் சென்று தூங்கிப்போயிருந்தான். தன் அறையில் அவனைக் கண்டு வியக்கக்கூட ஹரிஹரனுக்கு நேரம் இல்லை.

ஏற்கனவே கொஞ்சம் புரண்டுகொண் டிருந்த ரகு விளக்கு வெளிச்சத்தில் பளிச்சென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான். கூசிய கண்களைப் படபடவென்று கொட்டிக் கைகளால் தேய்த்தான். தகப்பனாரைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது,

"அப்பா!"

"இங்கே எங்கேடா வந்தே?" குழந்தையின் பக்கம் திரும்பாமலே பொட்டலத்தைப் பிரித்தபடி பேசினான் ஹரிஹரன். ஒரு நகைப்பெட்டியைப் பிரித்து எடுத்தான்.

"வந்தேம்பா."

"சரி சரி. உன் ரூமுக்குப் போய்த் தூங்கு."

"நீ தூங்க வையப்பா. அப்பத்தான் தூங்குவேன்."

"வேறே வேலை இல்லை." ஹரிஹரன் பெட்டியிலிருந்து கண்ணைக் கவரும் ஒரு முத்துமாலையை எடுத்தான். பத்திர மாய்த்தான் இருக்கிறது என்று ஆறுதல் அடைந்தான். 'இதை அணிந்துகொண்டால் நிர்மலா இன்று அந்த நீலப் புடைவையுடன் அப்ஸரஸ்போல் விளங்க மாட்டாளா!'

ரகு, மாலையைக் கவனித்துப் பார்த்தான்.

"அது யார் சங்கிலிப்பா?"

"உனக்கென்ன அதைப்பத்தி? பேசாமல் தூங்கு."

ஹரிஹரன் மறுபடியும் பெட்டியைக் காகிதத்தில் சுற்றி நிஜார்ப் பையில் வைத்துக்கொண்டான்.

ரகு எழுந்து அவனிடம் வந்தான். "அதை எனக்குக் காட்டினுத்தான் விடுவேன்."

"போடா, அந்தண்டை. தொந்தரவு பண்ணுதே."

அவன் கதவை நெருங்கிவிட்டான். ரகு விடவில்லை. தொடர்ந்து வந்து அவன் ஆடையைப் பிடித்து இழுத்துக் கொண்டே, "காட்டினுத்தான் விடுவேன். எனக்கு அதைப் போட்டுவிடு" என்று சண்டித்தனம் செய்தான்.

ஹரிஹரனுக்குக் கோபம் பொங்கலாயிற்று. தன் வழியைப் பறிக்கும் மகனைப் பார்த்து, "விடப்போறியா, உதைக்கட்டுமா?" என்று சீறினன்.

"ஊஹூம். நீ அதைக் கொடுத்தாத்தான் உன்னை விடுவேன்" என்று அப்பாவின் கைகளை இழுத்துவைத்துக் கொண்டான், கு.

"விடுடா, சனியனே!" என்று ஹரிஹரன் தன் கைகளை முரட்டுத்தனமாக இழுத்துக்கொண்ட வேகத்தில் ரகுவுக்கு வலி ஏற்பட்டுவிட்டது.

"இல்லையப்பா. எனக்குக் காட்டிட்டுக் கதை சொல்லித் தூங்க வெச்சுட்டுப் போ, அப்பா" என்று சொல்லி ரகு அவன் கையை நன்றாகப் பிடித்துக்கொண்டான்.

ஹரிஹரன் கோபத்தில் தன் வசத்தை இழந்தான். கையை வேகமாக விடுவித்துக்கொண்டு ரகுவின் முதுகில் ஓங்கி ஓர் அறை வைத்துவிட்டு, விளக்கையும் அணைத்துவிட்டு வேகமாகப் படி இறங்கிக் கீழே சென்றுவிட்டான்.

ரகுவின் ஓலம் அந்த அறையை நிறைத்து, மாடியின் மற்றொரு கோடியில் இருந்த பவானியின் அறைக்கும் பரவி, அவளுடைய விம்மல்களிடையே அவள் காதுகளிலும் பாய்ந்தது.

....

15

குழந்தையின் குரல், காதில் விழுந்தவுடனே பவானி தலை நிமிர்ந்தாள். ஒரு நிமிஷம் அப்படியே அசைவற்றுச் செவியுற்றாள். சந்தேகம் இல்லை. அது ரகுவின் குரல் தான். அவள் உடலின் ஒவ்வொரு நரம்பும் வெடித்து விடும்போல் துடித்தது. நீர் நிறைந்த கண்களுடனேயே எழுந்தாள். வெறிபிடித்தவள்போல் அழுகுரல் வந்த திசையை நோக்கி ஓடினாள். அது கணவனின் அறைக்கு அவளை அழைத்துச் சென்றது. உள்ளே பாய்ந்து விளக்கை ஏற்றினாள். ரகுவின் கண்ணீர் வடியும் முகம் அவளை நிமிர்ந்து நோக்கியது. அடுத்த நிமிஷம் கண்ணீர் தேங்கிய இரு முகங்களும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருந்தன.

உணர்ச்சிப் பெருக்கின் கைதியாய், பவானி அழுதுகொண்டே குழந்தையை அணைத்துக்கொண்டாள்; முத்தமிட்டாள்; கொஞ்சினாள்; முகம் வருடினாள்; இழந்த செல்

வத்தை மீண்டும் பெற்ற-வர்ணனைக்கு எட்டாத-எக்களிப்பில், வெறிகொண்டு விட்டாள்.

குழந்தை, அவள் அணைப்பினுள் அழுதுகொண்டே இருந்தான். ஆனால் அது ஆறுதல் அடையும் விம்மல் தான். அந்த அணைப்பின் நிழலில் அவன், தான் எல்லா அச்சங்களிலிருந்தும் காப்பாற்றப்பட்டுப் பத்திரமாக இருப்பதுபோல் உணர்ந்தான்.

அழுகையும் சிரிப்புமாகப் பவானி ரகுவைப் பார்த்தாள். உள்ளம் ஏமாற்றத்துக்குப் பின் வந்த இந்த இன்ப லாகிரியால் நிலைதவறிப் பேயாட்டம் ஆடியது. பதறும் கைகளால் அவனைத் திரும்பத் திரும்பத் தடவிக்கொடுப்பதும் மார்புடன் தழுவிக்கொள்வதுமாக இருந்தாள்.

"கண்ணு......என் ராஜா......ரகு......!"

"அம்மா!"

பவானி, தன் புடைவைத் தலைப்பால் அவன் கண்ணீரைத் துடைத்து முத்தமிட்டாள்

"கண்ணே, நீ இங்கேயா இருந்தாய்? நான் உன்னைத் தேடினேனே. நீ இல்லை என்ற எண்ணத்தில் உயிர் இருந்தும் செத்தவளாய்ப் போனேனே!" அவள் உதடுகள் துடித்தன. "நீ மறுபடியும் கிடைத்தாயா? உயிர் வந்தது; எனக்கு இப்போதுதான் உயிர் வந்தது."

ரகு, அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு மறுபடியும் விம்மினான்; மறுபடியும் அவள் அவனது கண்ணீரைத் துடைத்து அணைத்துக்கொண்டாள்.

"ஏண்டா அழுகிறாய் ராஜா?"

"அம்மா......அப்பா அடிச்சா......"

அவன் கனவு கண்டு பயந்துவிட்டதாக எண்ணிப் பவானி அவனைப் பின்னும் இறுகத் தழுவிக்கொண்டாள். பயப்படாதே. நான் இருக்கிறேன். உனக்கு நான்; எனக்கு

நீ. வேறு என்னடா வேண்டும் நமக்கு? நீ இருந்திரா விட்டால் இந்த இன்பங்கூட எனக்குக் கிடைத்திருக்குமா? இந்த இன்பந்தாண்டா நிஜம். மீதி எல்லாம் பொய். எனக்கு வேண்டியது இந்த இன்பந்தான். வெகு நாளைக்கு முன்பே கிடைத்திருக்க வேண்டியதுடா இது; இப்போது தான் கிடைக்கிறது.''

''அம்மா, நீ என்ன சொல்றே?''

பவானி, தன்னைச் சுதாரித்துக்கொண்டாள். உணர்ச்சிப் பெருக்கில் கொட்டிய வார்த்தைகள் அவள் இருதயத்தின் பாரத்தைக் கொஞ்சம் குறைக்கத்தான் குறைத்தன. கண்ணைத் துடைத்துக்கொண்டாள். கம்பீரமான பார்வையுடன் தலை நிமிர்ந்தாள். முதலில் துயரமும் பிறகு இன்பமும் வெறியாட்டம் ஆடிய உள்ளத்தில் இப்போது ஆழ்ந்த அமைதியோடு கூடிய திடமே இருந்தது. நிச்சலமான அந்த வறண்ட விழிகளில் உள்ளத்தின் உறுதி தோன்றியது.

''ரகு!''

''அம்மா!''

''நீ என்னோடு வந்துவிடுகிறாயா?''

''எங்கே அம்மா?''

''எங்கேயாவது; ரொம்ப தூரத்திலே.''

''ஊருக்கா அம்மா? நீ நாளைக்கு ஊருக்குப் போறயாம், என்னை விட்டுட்டு. என்னையும் அழைச்சுண்டு போயிடறயா?''

பவானி ஒரு விம்மலோடு, ''உனக்கு என்கிட்ட அவ்வளவு ஆசை இருக்காடா கண்ணு?'' என்றாள். அவள் குரல் தழுதழுத்தது.

''ஆமாம்மா.''

குழந்தையைச் சேர்த்து அணைத்துக்கொண்டு உச்சி மோந்தாள் பவானி. நீர் நிறைந்த கண்களை மூடிக்கொண்டு

தன் ஆனந்தத்தில் சற்று நேரம் மௌனமாகத் திளைத் திருந்தாள்.

"ரகு!" கண்களைத் திறந்து தன் இருதய அன்பை யெல்லாம் முகத்தில் காட்டியவாறே பவானி பேசினுள். "ரகு, என் கையில் காலணுக் காசு இல்லை. ஆனுல் உன் னிடம் ஆசைமாத்திரம் நிறைய இருக்கிறது. நீயும் நானும் எங்கேயாவது ஓடிப் போய்விடலாம். அப்பாவை விட்டு என்னுடன் நீ வருவாயா ராஜா?"

குழந்தை வெகு நேரம் யோசிக்கவில்லை. அவன் முதுகில் அடி இன்னும் சுட்டுக்கொண் டிருந்தது. தாயின் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு, "அப்பா என்னை அடிக்கரு. நீ என்னை ஆசையாக் கட்டிக்கறே. எனக்கு அப்பா வேண்டாம். உன்கூட வந்துடறேன்" என்ருன்.

பொங்கிவரும் இருதயத்துடன் அவளுடைய ஆனந்த மும் பொங்கிவந்து உதடுகளில் புன்னகையாகவும் கண் களில் நீராகவும் துடித்தது.

"ரகு, நீ பிறந்து அம்மாவுக்கும் வாழ்வைக் கொடுத் துட்டேடா, செல்லம்!"

ரகுவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனுல் அந்த மெலிந்த பயங்கர உருவத்தின் முகத்தில் தோன்றிய அன்பு அவனுக் குப் புரிந்தது; வாய்விட்டுச் சிரித்தான்.

பவானி, அவனை இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டே மூடிய கண்களுடன் மிருதுவான குரலில், "நமக்கு இந்த இடம் வேண்டாம். எங்காவது தொலைவில்-மிகத் தொலைவில்-மனித குணம் படைத்த மனிதர்கள் இருக்கமாட்டார்களா? என் துயரத்தைப் பின்னே விட்டு இந்த இன்பத்தைக் கைகளில் ஏந்திக்கொண்டு அவர்களிடம் போகிறேன். இரவை விட்டு இந்தக் கதிரொளியோடு அருணேதயத்தை நோக்கிப் போகிறேன்" என்ருள்.

16

ரகுவை அடித்துவிட்டு அவசரமாகக் கீழே இறங்கிய ஹரிஹரனுல் அவ்வளவு அவசரமாக நிர்மலாவின் வீட்டை அடைய முடியவில்லை. சைக்கிளில் ஏறி உட்கார்ந்து ஓட்ட முயன்ருன், அது நகரவில்லை. 'டயர்' வெடித்து விட்டிருந்தது!

ஹரிஹரனின் முகம் சிடுசிடுத்தது. இப்படியா தன் வேலை தாமதமாக வேண்டும்? பொதுவாக உலகம் முழுவதையும் வெறுத்தவாறு, சைக்கிளைத் தூக்கிக்கொண்டு கொல்லைப் புறம் இருந்த ஒரு சிறு அறைக்குப் போனுன். சைக்கிள் சம்பந்தமான பொருள்களெல்லாம் அங்கேதான் இருந்தன. முதலில் டயரை ஓட்டினுன். பிறகு காற்றடிக்கப் 'பம்ப்'பைத் தேடினுன், அதைக் காணவில்லை.

ஹரிஹரனுக்கு வந்த கோபத்தில் உலகத்தையே எரிக்கும் சக்தி அவனுக்கு இருந்திருக்குமானுல் கட்டாயம் எரித்திருப்பான்—நிர்மலாவைத் தவிர. கோபாவேசத்தோடு அறை முழுவதும் சாமான்களை இப்படியும் அப்படியுமாகப் புரட்டித் தேடினுன். அக்கம் பக்கத்தில் 'பம்ப்' தவறுதலாக வைக்கப்பட் டிருக்கக் கூடிய இடங்களிலும் தேடினுன். கொஞ்சம் சாந்தமாகத் தேடியிருந்தால் முன்பே கண்ணில் பட்டிருக்கக்கூடிய 'பம்ப்', வெகு நேரத்துக்குப் பிறகு சைக்கிள் அறையிலேயே கிடைத்தது. படபடப்புடன் சைக்கிள் டயருக்குள் காற்றை ஏற்றினுன். பிறகு அதை மறுபடியும் தூக்கிக்கொண்டு முன்பக்கம் வந்தான்.

ஹாலில் நுழைந்த அவனுக்குப் பெரிய ஆச்சரியம் உண்டாயிற்று. நிர்மலா மாடிப் படிகளினின்று இறங்கிக் கொண் டிருந்தாள்!

கண்களை விரித்து, "நீயா! இங்கேயா!" என்ருன்.

நிர்மலாவும் அவனைக் கண்டு ஒரு கணம் திகைத்தாள். ஆனால் அவன் பின்கட்டிலிருந்து வருவதைக் கண்டு அவளுக்கு நிம்மதி உண்டாயிற்று.

"ஆமாம், நான்தான்" என்றாள்.

"நீ எப்போது வந்தாய்? மாடியிலிருந்து வருகிறாயே!" என்றான் ஹரிஹரன், பதற்றத்துடன். அவள் வெகு நேரத்துக்கு முன் வந்து பவானியுடன் பேசிக்கொண்டிருந் திருப்பாளோ? பவானி இவளைத் தனியாகச் சந்திக்க விரும்பியிருந்தாளே. என்னைப்பற்றிய உண்மையைச் சொல்லியிருந்தாளானால்......?

நிர்மலா சாதாரண முகபாவத்துடன் கீழே இறங்கி வந்து ஒரு சோபாவின்மீது உட்கார்ந்துகொண்டாள். "நான் வந்து நேரம் ஆகவில்லை. நீங்கள் உங்கள் அறையில் இருப்பீர்களென்று மாடிக்குப் போனேன். இதோ திரும்பி வருகிறேன்."

ஹரிஹரன் நிம்மதியாகப் பெருமூச்செறிந்தான்.

"என்ன விஷயமாய் வந்தாய், நிர்மலா?"

"அதிகமாக ஒன்றும் இல்லை. ஓர் ஐம்பது ரூபாய் அவசரமாக வேண்டியிருக்கிறது. சிநேகிதி ஒருத்தி ஒரு புடைவை கொண்டுவந்தாள். எங்களுக்குள் முன்பே ஒப்பந்தம். விலைதான் நான் நினைத்ததற்கு மேல் ஐம்பது ரூபாய் ஆகிறது. அப்பாவை மறுபடியும் கேட்கப் பயமாக இருக்கிறது. நீங்கள் கைமாற்றாகக் கொடுத்தால் என் 'பாக்கெட் மணி'யிலிருந்து இரண்டு மூன்று மாதத்தில் கொடுத்துவிடுகிறேன்."

ஹரிஹரன் புன்முறுவலுடன் அவளருகில் வந்தான். "இதென்ன பிரமாதம்? கட்டாயம் கொடுக்கிறேன். நீ திருப்பித் தரவேண்டுமா என்ன?"

"பின்னே வேண்டாமா?"

"வேண்டவே வேண்டாம்." ஹரிஹரன் சோபாவில் அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான். "நீ இதற்கே இந்தப் பாடு படுத்துகிருயே. நான் வாங்கியிருக்கும் பரிசைப் பார்த்தால் என்ன சொல்வாய்?"

"பார்த்தால்தானே தெரியும்?"

ஹரிஹரன் முத்துமாலையை வெளியில் எடுத்தான். அதன் ஒளியைக் கண்டு நிர்மலா பின்வாங்கினுள்.

"அடே......யப்பா! என்ன இது?"

"துக்கமயமானவர் இப்படியெல்லாம் பரிசு வாங்குவானேன்?"

"இதோ பார், நிர்மலா. நீ என்னிடம் நிரம்ப அநுதாபம் உள்ளவள். நீ எனக்கு இதுவரை காட்டியிருக்கும் கனிவுக்கு என் முழு நன்றியை இந்த எழுநூறு ரூபாயால் மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள முடியுமா?"

"இதன் விலை எழுநூறு ரூபாயா!" நிர்மலாவின் திறந்த வாய் மூடவில்லை.

ஹரிஹரன் மனத்துக்குள் சிரித்துக்கொண்டான். விலை உயர்ந்த நகைகளில் மோகித்துப் போகாத பெண்களும் உண்டா?

"ஆமாம். அதுதான் விலை."

"இதை நான் எப்படி அங்கீகரிப்பது?" நிர்மலாவின் அதிர்ச்சி இன்னும் தீரவில்லை.

"எப்படித் தெரியுமா? இப்படித்தான்" என்று கூறி, அவன், மாலையை அவள் கழுத்தில் அணிவிக்க வந்தான்.

நிர்மலா தடுத்து, மாலையைத் தன் கைகளில் பற்றிக்கொண்டு அதையே சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். கண்களில் யோசனை நிறைந்திருந்தது. "அவ்வளவு விலையா?" என்ருள் மெதுவாக.

"அது ஒரு பெரிய காரியமா? நீ எடுத்துக்கொள்ளத்

தான் வேண்டும். இல்லாவிட்டால் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கும்.''

''எடுத்துக்கொள்கிறேன். இதற்கு ரொம்ப ரொம்ப வந்தனம்.'' நிர்மலா, தீர்மானத்துடன் பேசித் தலை நிமிர்ந்தாள். அவள் முகத்தில் புன்னகை தோன்றியது. ''நாம் நினைக்காத எவ்வளவு விசித்திரங்கள் உலகத்தில் நடை பெறுகின்றன!''

''ஆமாம். எங்கே நிர்மலா, அதை அணிந்துகொள்; நான் பார்க்கிறேன்.''

நிர்மலா அணிந்துகொண்டாள்.

''நீ இப்போது எவ்வளவு அழகாக இருக்கிறாய், நிர்மலா! பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை. உன்னைப் பார்த்துக்கொண் டிருந்தாலே போதும்; வேறொன்றும் வேண்டாம்.''

''பவானி அக்காவும் ஒரு சமயம் இவ்வளவு அழகாக இருந்தார்கள் அல்லவா?''

ஹரிஹரனுக்கு யாரோ தன் தலையில் ஓங்கி அடித்தது போல் இருந்தது. அசைவற்று மலைத்துவிட்டான்.

நிர்மலா, மெள்ளச் சிரித்துக்கொண்டே மாலையைக் கழற்றினாள். ''இதைப் போட்டுக்கொண்டே யிருந்தால் நீங்களே கண் வைத்துவிடுவீர்கள்போல் இருக்கிறதே! இப்போது கழற்றிவிட்டு அப்புறம் எப்போதாவது அணிந்துகொள்ளலாம்'' என்று சொல்லியவாறே மாலையைத் தன் ரவிக்கைக்குள் போட்டுக்கொண்டு எழுந்து நின்றாள். ''பணம் உங்கள் பாக்கெட்டிலேயே இருக்குமே; கொடுக்கிறீர்களா?''

''பாக்கெட்டில் இன்று வைத்துக்கொள்ளவில்லை. என் அறையில் இருக்கிறது. இதோ போய்க் கொண்டு வருகிறேன். பிறகு உன் வீட்டுக்குப் போகலாம்'' என்று

ஹரிஹரன் மாடிப்படியை நோக்கி நடந்தான்.

நிர்மலாவின் முகம் பேயறைந்தாற்போல் ஆகி விட்டது. "வேண்டாம், வேண்டாம். சிரமப்படாதீர்கள். பணம் நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்" என்று கூவிய வளாக அவன் முன்சென்று வழிமறித்தாள் நிர்மலா.

"என்ன பைத்தியக்காரத்தனம் இது? மாடிக்குப் போவது ஒரு சிரமமா? உனக்காக எதைத்தான் நான் செய்யமாட்டேனென்று நினைக்கிறாய், நிர்மலா?" ஹரி ஹரன் படிகளில் ஏறத் தொடங்கிவிட்டான்.

"அப்படியானால் என் பேச்சைத் தட்டாதீர்கள். நாளைக்குக் கொடுக்கலாம். பொறுங்கள்."

அவன் மாடிக்குப் போய்விட்டான்.

நிர்மலா செயலிழந்து சற்று நேரம் நின்றுவிட்டாள். அவள் கைகள் பதறின. மருண்ட கண்களுடன் மேலே அண்ணாந்து பார்த்தாள். பிறகு ஒரு கையால் மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டு, 'இன்று என்ன நேரப் போகிறதோ!' என்ற பெரும் பீதியுடன் அவளும் மாடிக்கு ஏறலானாள்.

17

முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சி அணைத்துச் சீராட்டிய குழந்தையைக் கடைசியாகத் தன் கரங்களி னின்று விடுவித்தாள் பவானி.

"ராஜா, இப்போதுதான் மிகவும் முக்கியமான வேலை. நாம் இங்கிருந்து வெகுதூரம் போகிறவரைக்கும் நீ கத்தக் கூடாது. ஒன்றும் பேசவும் கூடாது. அம்மா தோள் மேலேயே தூங்கிப் போய்விட்டாலும் நல்லதுதான்."

"நான் தூங்கறபோது கூட நீ என்னோடேயே இருப்ப

யாண்ணே? என்னை விட்டுட்டுப் போயிட மாட்டயே?"

"கண்ணு, இனிமேல் உன்னை விட்டு நான் எங்கேயுமே போக மாட்டேன்."

"அப்போ சரி,"

பவானி எழுந்து குழந்தையைத் தூக்கிக்கொண்டாள். கைகளில் அதற்குப் போதுமான பலம் இல்லை, ஆனால் மனத்தில் இருந்தது.

ஆபத்தான காரியம் கண்முன் இருந்தது. அதற்காகப் பவானி தன் பயத்துக்கும் உணர்ச்சிகளுக்கும் மேலே ஓர் உறுதியை நிலைநாட்டிக்கொண்டு நடந்தாள்.

கதவருகில் சென்றுவிட்டாள். அப்போது அறையை நெருங்கி வரும் காலடி யோசையைக் கேட்டு அவள் இருதயம் ஒரு கணம் நின்றுவிட்டதுபோல் தோன்றியது. உடலில் இருந்த ரத்தமெல்லாம் தலைக்கு ஏறியது. மருட்சியே இரண்டு கண்களாக அவள் முகத்திலிருந்து பெயர்ந்து, தன் புதுவாழ்வில் பாதகமாக வருவதுபோல் இருந்த தடையை அறியத் திகிலுடன் விழித்தது.

அந்தப் பயத்துக்கு முன் தோன்றினான் ஹரிஹரன்.

சற்று நேரம் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றார்கள். பவானியின் முகம் ஒரு கணம் விவரிக்க முடியாத உணர்ச்சியால் வெளிறியது. பிறகு அந்த உணர்ச்சிச் சுழலும் பயமும், தன்னை முடிவாக வஞ்சித்து விட்ட விதியின் கொடுமையினால் தோன்றிய பொறுக்க முடியாத வேதனையும் ஒரு வெறுமையாக மாறிச் சலனமற்று விழுந்துவிட்டன. எல்லாம் கைகூடி வந்து கடைசியில் இன்பத்தை அவள் இருதயம் பருகப்போகும் தருணத்தில் அதை யாரோ பறித்துவிட்டதுபோன்ற ஓர் உணர்ச்சி அவள் ஆத்மாவை மூடியது. 'இனி இன்பம் இல்லை, இல்லை, இல்லை!' என்று சொல்வதுபோல் அவள் இருதயம் வேகமாக அடித்துக்கொண் டிருந்தது.

•

எலும்பும் தோலுமாகச் சுருங்கிய முகத்திலிருந்து தன்னைப் பார்த்து இமைக்காமல் விழித்துக்கொண்டிருந்த இரண்டு பிரம்மாண்டமான கண்களைப் பார்த்து ஹரிஹரன் கடைசியில் பேசினான்: "பவானி, என்ன இது?"

அவன் குரல் இடிமுழக்கம்போல் அதிர்ந்தது. முகம் ரத்தமாகிவிட்டது.

பவானி பேசவில்லை. அவளுக்கு இனிப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. விதியின் கொடிய பேச்சுக்குமுன் மௌனத்தைத் தவிர அவளிடம் ஒரு பதிலும் இல்லை.

"நீ இங்கே என்ன செய்கிறாய்? உன் அறையில் ஏன் இல்லை? குழந்தையை எதற்குத் தூக்கிக்கொண்டிருக்கிறாய்?"

இப்போதும் பவானி பதில் உரைக்கவில்லை. தீவிரமான போரில் அவள் தோற்றுவிட்டாள். இப்போது அவளுக்கு ஆயாசந்தான் மேலோங்கியது. இனிப் போரிட அவளுக்குத் தெம்பில்லை. பேசாமல் போய் இருட்டில் படுத்துக்கொண்டு மனத்தில் ஓர் எண்ணமும் இல்லாமல் மறைவோடு ஒன்றுசேர்ந்துவிட்டால் அவளுக்குப் போதும். என்றையும்விடக் கடுமையாகப் பொங்கிவந்த துயரத்துடனும் ஆத்திரத்துடனும் ஒரு தரம் அவனைப் பார்த்தாள். உடம்பெல்லாம் நடுங்கியது. உதடுகள் துடித்தன. அவள் கண்கள் ஒரு பரிதாபக் கூக்குரலை அவனையும் வீட்டையும் உலகையும் ஊடுருவி ஆண்டவன் பாதத்தில் எட்டச் செய்து, பிறகு குனிந்துவிட்டன. நெருப்பு ஒரு தரம் குபீரென்று கொழுந்துவிட்டெரிந்து தீப்பிழம்பால் வானத்தை அளாவிப் பிறகு தணிந்து சாம்பலாகிவிட்டது.

"பேசுவதற்கு என்ன உனக்கு? ஏன் இங்கே வந்தாய்? சொல்லு..."

பவானி தள்ளாட ஆரம்பித்துவிட்டாள். அவள் மூச்சு வேகமாக வரலாயிற்று.

ஹரிஹரனின் ஆத்திரம் அதிகமாயிற்று.

"ஏதோ விஷயம் இருக்கிறது. நான் திரும்பவும் நிர்மலாவுடன் போவதாக இருந்தேன். ஆனால் இப்போது போவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். கொடு அவனை இங்கே. உன் அறைக்குப் போ. எங்கேயாவது ஓடிப்போய் விடலாம் என்று யோசித்தாயா? அதுதானே உத்தேசம்?"

மூடிய கண்களிலிருந்து கண்ணீர் வெளிப்பட, பவானி உதட்டைக் கடித்துக்கொண்டு தலையை மேலே உயர்த்தினாள். அந்த வேதனைச் சரித்திரம் ஒரு கணம் ஹரிஹரனையும் என்னவோ செய்துவிட்டது; ஆனால் ஒரு கணத்துக்குத்தான்.

"கொடு அவனை இங்கே. உன் அறைக்குப் போ!"

பவானியின் கரங்கள் குழந்தையைப் பின்னும் இறுகப் பற்றிக்கொண்டன. குழந்தையும் அவளைக் கட்டிக்கொண்டு பயந்த கண்களால் தகப்பனாரைப் பார்த்தான்.

"ரகுவை என்னிடம் கொடு."

நீட்டிய கரங்களுடன் நெருங்கிய அவனைப் பார்த்து, ரகு கையை வேகமாக ஆட்டிக்கொண்டே, "இங்கே வராதே நீ; போ!" என்றான். ஹரிஹரனின் கோபம் கட்டுக்கு அடங்கவில்லை.

"ராஸ்கல், முதுகுத் தோலை உரித்துவிடுகிறேன்...!"

ரகுவை எட்டித் தொட்டுவிட்டான் அவன்.

பவானி தன்னை அறியாமல் பின்வாங்கினாள். "வேண்டாம், வேண்டாம். அவன் என்னுடையவன். தொடாதீர்கள் அவனை......!"

இருதயத்தைக் கிழித்துக்கொண்டு இந்த வார்த்தைகள் பதறி வெளிவந்தன. தன் குழந்தையை, தன் இன்

பத்தைப் பற்ற வரும் காலனைப்போல் ஹரிஹரன் அவள் கண்களுக்குத் தோன்றினன். தீப் பறக்கும் விழிகளால் விகார மாகிவிட்ட அந்த உருவத்தைப் பார்த்து, "கொடுக்க மாட்டேன் அவனை!......" என்று அவள் உதடுகள் அசைந் தன. அவள் கண்களில் பார்வை மங்கி அவள் உலகம் கறுத்து அஸ்தமிக்க லாயிற்று.

ஹரிஹரனின் கோபம் அக்கினி ஜ்வாலையாகப் பீறி எழுந்தது. என்ன செய்திருப்பானென்று அவனுக்கே தெரியாமல் ரகுவை நோக்கிக் கைகளை வீசினன். "ஐயோ அம்மா!" என்று ரகு வீரிட்டான்.

அதே சமயம் நிர்மலா உள்ளே வந்தாள்.

18

நிர்மலாவைப் பார்த்ததும் ஹரிஹரன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டான். அவள் கண் முன் எந்தக் குரூரச் செயலையும் அவன் செய்ய விரும்பவில்லை.

பவானி, குழந்தையின் தலையை நன்ருகத் தன் தோளில் சார்த்திக்கொண்டு, உள்ளே வந்த இளம் வடி வத்தை வெறித்துப் பார்த்தபடி நின்ருள்.

"பணம் கொண்டுவருகிறேன் என்றீர்கள். ஆளைக் காணவில்லை. பார்த்துப் போக வந்தேன்" என்று நிர்மலா ஒன்றும் அறியாத குழந்தையின் முகபாவத்துடன் கூறினள். தன்னுடைய திகில் மறைந்து இப்போது அமைதியாகப் பேசினள்.

ஹரிஹரன் தன் முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டான். "ஒன்றும் இல்லை. மாடிக்கு வந்தபோது இவர்கள் இருவரும்......" என்று நிறுத்தினன்.

"என்ன செய்தார்கள்? கீழே அப்புறம் போகலா

மென்று தங்களுடன் பேசிக்கொண் டிருக்கச் சொன்னார்களா?'' கள்ளமற்ற புன்னகையுடன் அவள் ஹரிஹரனை யும் பவானியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''இல்லை, ஏன் இங்கே வந்தார் என்றுதான் நொந்து கொண்டிருக்கிறோம்?'' என்றாள் பவானி. இனி எந்த விபரீதமும் தன்னை அழிக்க முடியாத அளவுக்குத் தான் அழிந்துவிட்டதை உணர்ந்த மனநிலையில் அவள் மயக்கம் தீர்ந்தது. துயர மிகுதியின் தைரியம் அவளுக்கு வந்து விட்டது. தலை நிமிர்ந்து நின்ற அவள் கண்களில் கோபம் கனன்றது. குழந்தையை இறுகத் தழுவி நின்றாள், அவனுக்காக உலகத்தையே எதிர்க்கத் தயாராக நிற்பவள் போல்.

நிர்மலாவின் புருவங்கள் உயர்ந்தன. ''ஏன் இப்படிக் கோபித்துக்கொள்கிறீர்கள்? குழந்தை ரொம்பப் படுத்தினானா?''

ஹரிஹரன் உஷ்ணமாக, ''ஏன் கோபித்துக்கொள்கிறாள், தெரியுமா? குழந்தையைத் தொடக்கூடாதென்று தெரிந்தும் அவனுடன் இங்கே ரகசியமாகக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். மனத்தில் இன்னும் என்ன என்ன உத்தேசமோ? அப்போது நான் வந்துவிட்டேன். அது தான் கோபம்'' என்றான்.

பவானி அடிபட்ட நாகம்போல் சீறி, ''உங்களுக்கு என்ன தெரியும். என் மனத்தைப்பற்றி? தெரிந்திருந்தால்......'' என்று முடிக்கு முன் நிர்மலாவின் குரல் குறுக்கிட்டது.

''தெரிந்திருந்தால் இப்படிக் கோபித்துக்கொள்ள மாட்டீர்கள், மிஸ்டர் ஹரிஹரன்!''

பவானி, ஹரிஹரன் இருவரும் திடுக்கிட்டார்கள். மேலே என்ன வரப்போகிறது என்று அவளை உற்றுப் பார்த்தார்கள். பவானிக்கு நிலை கொள்ளவில்லை.

நிர்மலாவின் வாயினின்று வார்த்தைகள் அமைதியாகப் புறப்பட்டு அவன் செவிகளில் விழுந்தன.

"மிஸ்டர் ஹரிஹரன், நான் உங்களைத் தேடி இந்த அறைக்கு வந்தபோது ரகு இங்கே அழுதுகொண்டிருந்தான். அப்பா அடித்தார் என்று சொன்னான். நான் சமாதானப்படுத்த முயன்றேன், முடியவில்லை. சரி, தாய் வந்தால் சீக்கிரம் சமாதானம் ஆகிவிடுவான் என்று உங்கள் மனைவியின் அறைக்குச் சென்று அவர்களை எழுப்பி இங்கே அழைத்துவந்து விட்டுக் கீழே போய்விட்டேன். சமாதானப்படுத்திய பிறகு குழந்தை என்ற பரிவில் அவனைக் கொஞ்ச நேரம் சீராட்டிக்கொண்டிருந்தார்கள்போல் இருக்கிறது. தாயின் மனத்தை நீங்கள் புரிந்துகொண்டிருந்தால் இதை ஒரு பெரிய விஷயமாக நினைத்துக் கோபித்திருக்கமாட்டீர்கள். இப்போதும் அது உங்களுக்குப் பெரிய பாவமாகத் தோன்றும் பட்சத்தில் அதற்கு உண்மையான பொறுப்பாளியாகிய என்னிடம் கோபித்துக்கொள்ளுங்கள். விளைவு என்ன ஆகிறதென்று தெரியும்."

அசந்துபோய்க் கல்லாக நின்றார்கள், பவானியும் ஹரிஹரனும். ஒரு நிமிஷம் யாரும் பேசவில்லை. ஹரிஹரனுக்கு உடல் வேர்த்துக் கொட்டியது. அவன் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்துகொண்டு விட்டான்! நிர்மலா அவனைப்பற்றி என்ன நினைப்பாள்!

"ஓஹோ, அப்படியா அது? உன்னை நான் கீழே பார்த்தபோது, நீ இது ஒன்றையும் என்னிடம் சொல்லவில்லையே!" என்று அப்பொழுதும் தன் மனநிலையைக் காட்டிக்கொள்ளாமலே விறைப்பாகக் கேட்டான்.

கையைக் கட்டிக்கொண்டு நின்றபடி நிர்மலா மிகவும் வெறுப்பு அடைந்துவிட்டவள்போல், "ஆமாம். அதை ஒரு சாதாரண விஷயமாக நான் நினைத்தேன். அன்று ரகு

கீழே விழ இருந்தபோது அவன் அம்மா வந்து பிடித்துக் கொள்ளவில்லையா? ஆகையால்தான் இன்றும் அழைத்து வந்தேன். என்ன அவசியம் இருந்தாலும் தாய் குழந்தையை நெருங்கக் கூடாதென்று நீங்கள் உத்தரவு போட்டிருப் பீர்களென்று நான் என்ன கண்டேன்? உங்கள் மனைவிக் கும் உங்கள் கோபத்தினால் எவ்வளவு கசப்பு ஏற்பட் டிருக்குமென்று எனக்குப் புரிகிறது'' என்றாள்.

ஹரிஹரனுக்கு அவமானத்தினால் முகம் சிவந்து விட்டது. அவள் பார்வையில் விழுந்து போய்விட்ட தன் கௌரவத்தை நிலை நாட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் ''சரி சரி. போகட்டும்; விடு. நான் கேட்டபோது அவளாவது சொல்லியிருக்கலாம். நான் ஒன்றும் ரொம் பக் கோபித்துக்கொள்ள வில்லையே!'' என்றான். ஆனால் தடுமாறும் பேச்சும் சக்தியற்ற குரலும் அவனுக்கு எதிரி கள் ஆகிவிட்டன.

பவானி ஒன்றும் பேசவில்லை; அவள் கண் இமைக் காமல் நிர்மலாவையே பார்த்துக்கொண் டிருந்தாள். ஓர் அதிசயமே அல்லவா அவள் வாழ்வு நிரந்தரமாக இரு ளடையப்போகும் நேரத்தில் ஒரு விளக்கை ஏற்றி வைத்து விட்டது? கொஞ்ச நேரம் அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. பாதாளத்தில் விழப் போனவளை ஒரு கரம் மேலே தூக்கி விட்டுவிட்டது. அவள் வாழ்வில் - கண்ணீர்க் கோவையாக இருந்த அவள் வாழ்வில் - ஓர் இன்பச் சாயை, விதியின் சிரிப்பல்ல, தெய்வத்தின் புன் னகை, வந்து படிந்துவிட்டது! மரணப்படுக்கையில் மயங்கிக் கிடந்தவளுக்கா சஞ்சீவி கிடைத்துவிட்டது?

குமுறிக்கொண் டிருந்த சோகம் ஒரு சிலிர்ப்புடன் பெரிய ஆனந்த அலையாக மேலே எழும்பிக் கண்ணீர்த் திவலைகளுடன் தணிந்தது.

நிர்மலா, ஹரிஹரனைப் பார்க்காமல் பவானியிடம்

வந்தாள். "உங்கள் உடம்பு எப்படிப் பதறுகிறது! பலவீன நிலையில் இப்படிப்பட்ட கலாட்டாவெல்லாம் ரொம்ப அதிர்ச்சியாக இருக்குமே!" என்றாள்.

பரிவு ததும்பும் கண்களுடன் அவளைப் பார்த்த பவானிக்கு அப்போதுதான் ஆயாசம் தெரிந்தது. கால் தடுமாறி அப்படியே ஒரு நாற்காலியில் உட்கார்ந்துவிட்டாள். தூங்கிப் போய்விட்டிருந்த குழந்தையைத் தரையில் கிடத்தினாள். அவள் வார்த்தைகள் குழறின: "அம்மா, எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. இருதயத்துக்குள் நூறு உணர்ச்சிகள் பொங்குகின்றன. விளக்கி மட்டும் காட்ட முடிந்தால்......"

"வேண்டாம், எனக்குப் புரிகிறது."

"உனக்கு எல்லாம் புரிகிறதா!"

"ஆமாம்."

அவள் கருணைவிழிகள் பவானியின் நீர் நிறைந்த கண்களுடன் கலந்தன. அந்த நீரின் வழியே அன்புமயமான நன்றி அவள் பார்வைக்கு இலக்காகி இருதயத்தைத் தொட்டது.

19

"என்ன, பணத்தை எடுத்துக் கொடுக்கிறீர்களா?" என்றாள் நிர்மலா ஹரிஹரனைப் பார்த்து.

"இதோ." டிராயரின் பூட்டைத் திறந்து பர்ஸிலிருந்து ஐம்பது ரூபாயை எடுத்து, அவள் கையில் வைத்தபடியே ஹரிஹரன், "நிர்மலா, கோபமா?' என்றான்.

நிர்மலா அவனை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை புரிந்தாள். "கோபம் என்ன? அதெல்லாம் ஒன்றும் இல்லை" என்று சொல்லிப் பணத்தை வாங்கி வைத்துக் கொண்டாள்.

"சரி, நாம் புறப்பட வேண்டியதுதானே? ரொம்ப நேரமாகிவிட்டது. வீட்டில் அம்மா என்னைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண் டிருப்பாள்." பவானியின் அருகில் வந்தாள். நீங்கள் போய்ப் படுத்துக்கொள்ளுங்கள். நான் போய் வரட்டுமா? நாளைக்கு முடிந்தால் ஸ்டேஷனுக்கு வருகிறேன்."

பவானி ஒன்றும் சொல்லாமல் அவளைப் பார்த்துக்கொண் டிருந்தாள்.

"முடிந்தால் என்ன? கட்டாயம் நீ வரத்தான் வேண்டும். பவானிக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும்" என்றான் ஹரிஹரன்.

"ஏன், இவனுக்குமாத்திரம் இருக்காதா?" என்று நிர்மலா குனிந்து, தூங்கிக்கொண் டிருந்த ரகுவின் கன்னத்தை ஆசையாகத் தட்டினாள். "அப்பா, அம்மா இருவரும் ரெயில் ஏறுவதைப் பார்த்து அவன் அழாமல் சமாதானப்படுத்தி அழைத்து வருவேன்."

"சரி, கிளம்பு வா" என்றான் ஹரிஹரன்.

"இதோ நான் தயார். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று பவானியிடம் சொல்லிவிட்டு நிர்மலா திரும்பிய வேகத்தில் அருகில் இருந்த சிறு மேஜைமேல் மோதிக்கொண்டாள். அதில் இருந்த பூக்கிண்ணம் சாய்ந்து தண்ணீர் அவள் புடைவையின் மேல் கொட்டிவிட்டது.

"ஐயையோ!" என்று சொல்லிக்கொண்டு குனிந்து புடைவையைத் தட்டினாள். ஜலம் நன்றாகத் துணியை நனைத்திருந்தது.

"ஒரே ஈரமாய்ப் போய்விட்டதே!" என்றான் ஹரிஹரன்.

நிர்மலா பரிதாபமான முகத்துடன் பவானியின் பக்கம் திரும்பினாள். "ரொம்பக் கெட்டுப்போய்விட்டது. உங்கள் புடைவை ஒன்று இரவல் தருகிறீர்களா?"

"இதென்ன பிரமாதம்? ஆனால் என் புடைவையை நீ கட்டிக்கொள்வாயா?"

"அதனால் என்ன? சலவை செய்துவந்த ஒன்றைக் கொடுங்களேன். வந்து எடுத்துக் கொடுக்கிறீர்களா? எனக்கு நேரமாகிறது."

"இதோ வருகிறேன்" என்று பவானி எழுந்திருக்க முயன்றாள்.

"அவள் எதற்கு, நிர்மலா? இங்கேயே கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொள்ளட்டும். அவள் பீரோ, திறந்துதான் இருக்கும். போய் நீயே ஒரு புடைவையை எடுத்துக் கட்டிக்கொண்டு சீக்கிரம் வா" என்றான் ஹரி ஹரன்.

பவானி அவனை விழித்துப் பார்த்தாள். "எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை."

"நான் சொல்வதைத்தான் கேளேன்."

பவானி பல்லைக் கடித்துக்கொண்டு மறுபடியும் நாற் காலியில் சாய்ந்துகொண்டாள்.

"இதோ சீக்கிரம் வந்துவிடுகிறேன்" என்று சொல்லி நிர்மலா, அறையை விட்டுச் சென்றாள்.

ஹரிஹரனும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண் டான். "உனக்கு அவளுடன் அங்கே போகவேண்டு மென்று ரொம்ப ஆசை; இல்லையா பவானி, அவளைத் தனியாகச் சந்திக்க?" என்றான் ஏளனமாக.

"ஆமாம், ஆசைதான்."

"என்னைப்பற்றி அவளிடம் சொல்லித் தூற்ற வேண்டும்; இல்லையா?"

"உண்மையைச் சொன்னால் அவள் பிழைத்துப் போவாள். உங்களிடம் ஒன்று வேண்டிக்கொள்கிறேன். இந்த வாழ்வில் உங்களிடம் என் கடைசிக் கோரிக்கை

என்று வைத்துக்கொள்ளுங்களேன்.''

''எதற்கு இந்தப் பீடிகை?''

''அவளை ஏமாற்றுகிறீர்கள். சின்னஞ் சிறு பெண், இன்றுதான் பத்தொன்பது வயசு நிரம்புகிறது.''

ஹரிஹரன் ஒன்றும் சொல்லாமல் மெள்ளச் சிரித்தான். பவானி அவனை ஊடுருவிப் பார்த்தாள். அவனை மாற்ற முடியாது என்பது புரிந்துவிட்டது.

''உங்களையும் வைத்துக்கொண்டு அவளிடம் உண்மையைச் சொன்னால் என்ன செய்வீர்கள்?''

''நான் எல்லாவற்றையும் மறுக்க முடியும். உன் வாதத்துக்கெல்லாம் எதிர்வாதம் செய்து உன் பேச்சின் சக்தியைக் குறைக்க முடியும். போகப் போக என் சாமர்த்தியத்தினால் அவள் மனத்தை மாற்றவும் முடியும்.''

பவானி அவனைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தாள். அவள் உதடுகளில் ஒரு புன்னகை தோன்றியது. அவள் மனத்தில் நிர்மலாவைப்பற்றிய கவலை போய்விட்டிருந்தது. ஊருக்கெல்லாம் நல்லவனாக இருந்த ஹரிஹரனின் போக்குக்கு எதிராக அந்தப் பெண் ஒரு பெரிய பொய்யைச் சொல்லித் தன்னைக் காப்பாற்றினாள். ஏன்? அவள் உண்மையை எப்படியோ ஊகித்திருக்க வேண்டும். பவானியின் கட்சியில் அவள் பேசிவிட்டாள் என்றால் ஹரிஹரனின் உண்மைக் குணத்தை அவள் உய்த்துணர்ந்துவிட்டாள் என்றுதானே அர்த்தம்? அப்படிப்பட்டவள் அவனிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வாள். அதைப்பற்றிச் சந்தேகம் இல்லை.

''நான் அவளிடம் ஒன்றும் சொல்லப் போவதில்லை. பயப்படாதீர்கள்.''

''சொல்லப்போவதில்லையா? வேறு என்ன நீ தீர்மானிக்க முடியும்?'' என்று ஹரிஹரன் சிரித்தான்.

அந்தச் சிரிப்பினால் பவானியின் உள்ளத்தில் அவனைக் குறித்து ஒரு விசித்திரமான பெரும் பரிதாபம் உதித்தது. தன் விடுதலையின் எக்களிப்பு மறைந்து ஓர் ஆழ்ந்த சோகம் பிறந்தது. அவனைப்பற்றிய இந்த உணர்ச்சிகளை வாழ்வில் முதல் தடவையாக அவள் அப்போதுதான் அநுபவித்தாள். இரக்கம் தேங்கிய கண்களால் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தையை அவனை விட்டுப் பிரித்து எடுத்துப்போகப் போகிறாளே, அது உண்மையில் அவன் விஷயத்தில் அவள் இழைக்கும் மகத்தான தீங்கு தானே?

"இதைப் பாருங்கள்" என்றாள் துயரத்தோடு.

அலட்சியமாகக் கால்மேல் கால் போட்டுச் சுவரின் பக்கம் திரும்பிக்கொண் டிருந்த ஹரிஹரன் அவளைப் பார்த்து, "என்ன?" என்றான்.

ஆழ்ந்த விசனத்தால் அடக்கம் தோன்றிய முகத்துடன் மெலிந்த குரலில் உணர்ச்சியுடன் பவானி பேசினாள்: "ஒரு காலத்தில் நான் உங்களால் சந்தோஷமாக இருந்தேன். தாய் தந்தையற்ற அநாதையாக நான் இருந்த போது நீங்கள் என் கைப்பிடித்தீர்கள். என் பணத்துக்காகவா என்று நான் கவலைப்படவில்லை. என் வாழ்வின் ஆதரவாய், என் இன்பத்தின் தொடக்கமாய் ஒருவர் கடைசியாக எனக்குக் கிடைத்துவிட்டார் என்று உங்கள் பக்கத்தில் முதல் முதலில் மணையில் நின்ற அந்த ஒரு கணத்தில் நினைத்து மகிழ்ந்தேன். பிறகு நான் நீடித்து அப்படி மகிழ முடியாமல் நீங்கள் செய்துவிட்டீர்கள். ஆயினும் அவ்வளவு துயரத்தையும் வாழ்வின் நாசத்தையும் நான் இத்தனை காலம் எதிர்ப்பின்றிப் பொறுத்துக் கொண்டேன். அந்தத் துயரத்தின் பேராலும் நான் உங்களால் அநுபவித்த அந்த ஒரு கண மகிழ்ச்சியின் பேராலும் உங்களிடம் ஒன்று கோரலாமா?"

ஏதோ ஓர் உள்வருத்தத்துடன் துடித்த அவளது அமைதியான குரலையும் வார்த்தைகளையும் கேட்டபோது ஹரிஹரன் நெஞ்சிலும் மங்கலாக ஒரு வலி தோன்றியது.

"கட்டாயம் கேள், பவானி."

"நான் உங்களுக்கு எப்போதாவது அநியாயம் செய்ய நேர்ந்தால் என்னை மன்னித்துவிடுங்கள்."

ஹரிஹரன் ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டான். ஒரு நிமிஷம் அவனுக்குள் ஒரு விகார வடிவம் விலகி அவன் இருதயம் பேசியது.

"பவானி, என்னால் நீ ஒன்றும் சுகப்படவில்லைதான். நானும் அடிக்கடி என் நடத்தை சரியில்லை என்று நினைக்காமல் இல்லை. ஆனால் அந்த எண்ணம் நீடிப்பதில்லை. என்னுடைய சுபாவம்-மிருக சுபாவம் என்றுதான் வைத்துக் கொள்ளேன் - எப்போதும் வென்றுவிடுகிறது. சாகும் தறுவாயில் அதற்காக நான் வருந்துவேனோ என்னவோ? வாழ்வு முழுவதும் அதன் அடிமையாகத்தான் இருக்க விரும்புகிறேன்......"

பேசிக்கொண் டிருக்கும்போதே அவன் குறிப்பிட்ட 'மிருக சுபாவம்' மறுபடியும் மேலோங்கி அவன் மன நிலையை மாற்றிவிட்டது. ஆத்மா மறுபடியும் போர்வைக் குள் மறைந்துவிடவே, முகத்தில் ஒரு நிமிஷம் தோன்றிய மிருதுத்தன்மை மறைந்து பழைய கல்லாகிவிட்டது.

ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டே எழுந்து இங்கும் அங்கும் உலவினான். "ஆமாம். நான் என் வாழ்வை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை, நான் செய்த எந்தக் காரியத்துக்காகவும் நான் வருந்த வில்லை."

பவானியின் முகத்திலும் தீனபாவம் மறைந்து மறு படியும் அமைதி நிறைந்த உறுதி தோன்றியது. அவள் பேச்சு நிதானமாக அழுத்தமாக ஒவ்வொரு வார்த்தையாக

வெளிப்பட்டு ஈயத் துளிகள்போல் அவன் காதுகளில் விழுந்தன.

"உடல் இன்பத்தையே முக்கியமாக நினைத்துக் கண்ணை மூடிக்கொண்டு விட்டீர்கள். உங்களுக்கு ஒரு நாள் தண்டனை வரும். உங்களைப்போன்ற ஒவ்வோர் ஆணுக்கும் தண்டனை வந்தால் பிற்காலத்தில் என்னைப்போன்ற ஒவ்வொரு பெண்ணும் சுகம் அடைவாள்."

அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். எலும்புக் கூடாக இருந்த உடலிலிருந்து அஞ்சாத பார்வை கிளம்பி அவனைத் தீர்மானத்துடன் தீவிரமாக எதிர்த்தபோது விதியே அவனுக்கு முன் உருவெடுத்து வந்து பேசியது போல் பிரமை உண்டாகி அவன் உடல் லேசாய் நடுங்கியது.

20

"ரொம்ப நேரம் செய்துவிட்டேனு? மன்னிக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே நிர்மலா உள்ளே நுழைந்தாள். பவானியினுடைய சலவை செய்த வெள்ளை நூல் புடைவையில் அவளது இயற்கை அழகு பின்னும் சிறப்பாகத் திகழ்ந்தது. தன் நீலப் புடைவையை மடித்துக் கையில் பிடித்துக்கொண் டிருந்தாள்.

"போகலாம். வருகிறீர்களா?"

"நான் தயார்" என்ற ஹரிஹரன் கதவை நெருங்கி, "வா சீக்கிரம். பவானி, போய்ப் படுத்துக்கொள்" என்முன்.

நிர்மலா பவானியிடம், "நான் போய் வரட்டுமா? இதப் புடைவை இங்கேயே இருக்கட்டும். ஒரு சிநேகிதியைப் பார்த்துவிட்டு வீட்டுக்குப் போகவேண்டும். அங்கே இது

எதற்கு? நான் போய் வருகிறேன்'' என்றாள்.

கோமளயான அந்தக் குழந்தைமுகம் வாயால் சொல்ல முடியாத அன்பைக் கண்களில் ஏந்திப் பவானியைப் பார்த்துக்கொண் டிருந்தது.

பவானியின் முகமும் அன்பு மயமாகி விட்டது. எலும்பே உருவான உடலும் குழிவிழுந்த கண்களும் ஒட்டிய கன்னங்களும் துடித்துக்கொண் டிருந்த வெளிறிய உதடுகளும் அன்பினால் எழுதப்பட்ட அழகிய சித்திரங்கள் ஆகிவிட்டன.

அவள் இருதயம் பொங்கியது. கண்களில் நீர் மண்டியது. நிர்மலாவின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவளை மௌனமாகச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். குழி விழுந்த கண்கள் நன்றியால் நிரம்பின.

''போய் வா, அம்மா, உன்னை நான் என்றும் மறக்க மாட்டேன். ஒரு கஷ்டமும் இல்லாமல் சந்தோஷமாக நெடுநாள் வாழ்ந்திரு. என் ஆசீர்வாதம் என்றும் உன்னுடன் இருக்கும்.''

நிர்மலாவின் கண்களும் கலங்கின. வாய் பேசாமல் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அன்பு, அந்த ஆழ்ந்த மௌனத்துக்கிடையே இரண்டு உள்ளங்களையும் தொட்டது. அன்புமயமான கண்கள் அந்த மௌனத்துக்கிடையே விடை பெற்றுக்கொண்டன.

நிர்மலா ஒரு புன்னகையுடன் தன் கைகளை விடுவித்துக்கொண்டு கதவருகே சென்றாள். அங்கிருந்து ஒரு தரம் திரும்பிப் பார்த்தாள். ''புடைவை ஜாக்கிரதை. எதற்கும் அதை ஒருதரம் பிரித்து ரொம்ப நனைந்திருக்கிறதா என்று பார்த்துவிடுங்கள்'' என்று சொல்லியவாறே ஹரிஹரனுடன் நடந்து சென்று கண்ணுக்கு மறைந்தாள்.

பவானியின் இருதயம் பொங்கி வடிந்தது. ஆழ்ந்த ஒரு பெருமூச்சு நெஞ்சைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டது. உள்ளக்கொதிப்பும் ஏமாற்றமும் மகிழ்ச்சியும் மனவேதனையும் மீட்சியும் ஒன்றன்பின் ஒன்ருக அடுத்து அடுத்து உலுக்கிவிட்ட உள்ளத்தில் ஓர் ஆழ்ந்த நிம்மதி காணப்பட்டது. சற்றுநேரம் அசையாமல் நின்றுகொண்டு ஜன்னல் வழியாக வான இருளைப் பார்த்தாள். கடைசித் தடவையாக இருதயத்தில் 'ஓ' என்ற சப்தத்துடன் பெரிய அலைகள் எழும்பிக் கொந்தளித்து அடித்து ஆர்ப்பரித்துப் பிறகு சிறிது சிறிதாக ஓய்ந்தன. புல்லரித்த உடம்பை ஒருதரம் சிலிர்த்துக்கொண்டு முகத்தைத் திருப்பினுள். இரவு குளிர்ச்சியாக இருந்தபோதும் அவளுக்கு வேர்த்திருந்தது. துயர மிகுதிக்குப் பின் வந்த விமோசனம் மனத்தை ஆட்டிவிட்டுத்தான் அமைதியைக் கொடுத்தது.

கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு குழந்தையருகில் வந்தாள். மேஜை மேல் நிர்மலாவின் புடைவை இருந்தது. அவளை நினைத்துப் பவானியின் உள்ளம் குளிர்ந்து வாழ்த்தியது. புடைவையின் அருகே சென்று அதைத் தூக்கினுள். மடிப்புக் கலைந்து அதனுள்ளிருந்து ஒரு முத்துமாலையும் சில ரூபாய் நோட்டுகளும் ஒரு காகிதத் துண்டும் கீழே விழுந்தன.

அளவற்ற ஆச்சரியத்தோடு பவானி கீழே உட்கார்ந்து அவற்றைப் பார்த்தாள். காகிதத்தில் ஏதோ எழுதியிருந்ததைக் கண்டு அதை எடுத்துப் படித்தாள்.

"பவானி அவர்களுக்கு,

விருந்து நடந்த அன்று ஒரு நாள் நீங்கள் உங்கள் கணவருடன் வாக்குவாதம் செய்ததையும் இன்று ரகுவுடன் அவன் அப்பாவின் அறையில் நீங்கள் பேசிக்கொண்டிருந்ததையும் நான் கேட்க நேர்ந்தது. இன்று உங்கள் உத்தேசத்தைப் புரிந்துகொண்டு

உங்களுக்கு உதவி செய்யத் தீர்மானித்துவிட்டேன். உங்கள் கைச்செலவுக்காகவே மிஸ்டர் ஹரிஹரனிடம் எனக்கென்று சொல்லி ஐம்பது ரூபாய் கேட்டேன். அதையும் அவர் எனக்குப் பிறந்த நாளுக்கென்று வாங்கிக்கொடுத்த முத்துமாலையையும் இதோ உங்களுக்கென்று வைத்துவிட்டுப் போகிறேன்; மாலை 700 ரூபாய் பெறுமானது. அதைக் கொண்டு நீங்கள் எங்கும் தைரியமாகப் புது வாழ்வு தொடங்கலாம். அது உங்கள் கணவரின் பணத்தால் வாங்கப்பட்டது; உங்களுக்கு எடுத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. நீங்கள் நேரே ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய் இரவு கிளம்பும் ரெயில் எதிலாவது ஏறிவிட்டால் பிறகு கவலை இல்லை. நான் அவரை எவ்வளவு நேரம் தாமதப்படுத்த முடியுமோ செய்கிறேன். தெய்வம் இனியாவது உங்களுக்கு இன்பத்தையும் நிம்மதியையும் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

உங்கள் நன்மையைக் கோரும்;

நிர்மலா.''

பவானி சற்று நேரம் கடிதத்தை விடாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். கடிதம், அவள் அறையில் ஜுரக் குறிப்புக்களுக்காக வைத்திருந்த காகிதங்களுள் ஒன்றில் எழுதியிருந்தது. பவானி சிரித்துக்கொண்டாள். இந்தக் காகிதமும் நிர்மலாவுக்கென்று தந்த மாலையும் இப்படி உபயோகப்படப் போகின்றன என்று ஹரிஹரன் நினைத்திருப்பானா? ஏதோ ஒரு தெய்வநீதி உலகத்தில் இருப்பதாகவே பவானி அந்த விநாடியில் எண்ணினாள். பணக் கவலையை நிர்மலா தீர்த்துவிட்டாள் - எவ்வளவு சாமர்த்தியமாக எவ்வளவு முன்யோசனையுடன்! 'இதை எடுத்துக்கொள்கிறேன் அம்மா! என் மனம் நிம்மதியடையும்போது உன்னை வாழ்த்தி இப்போது பெற்றுக்கொள்வதைவிடப்

பதின்மடங்கு பெரிய செல்வத்தை உனக்குக் கொடுக்கிறேன்' என்று தனக்குள் கூறிக்கொண்டே பவானி கடிதத்தைக் கிழித்துப் போட்டாள். ரூபாயையும் மாலையையும் எடுத்துத் தன் ரவிக்கைக்குள் வைத்துக் கொண்டாள். விலையுயர்ந்த நகைகள் எல்லாம் அவளிடம் இல்லாமல் ஹரிஹரன் பாங்கியில் பத்திரப் படுத்தியிருந்தான். அவள் உடலில் இரண்டொரு நகைகள் இருந்தும் இல்லாதவையாய் அற்பப் பொருள்களாக இருந்தன. இப்போது பணக் கவலை இல்லை. அவள் நிர்மலாவை மனமார வாழ்த்தினாள்.

தனக்கென்று நாலு சாதாரணப் புடைவைகளைக் கைகளில் சுருட்டி எடுத்துக்கொண்டாள். அவள் பார்வை நிர்மலாவின் புடைவைமேல் விழுந்தது. 'உன் அடையாளம் இது' என்று நினைத்தவாறு பவானி அந்தப் புடைவையைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு அதையும் எடுத்துக்கொண்டாள்.

குழந்தையிடம் வந்து குனிந்து அவனைத் தூக்கினாள். அவள் முகத்தில் பரிவு படர்ந்தது. 'என் இன்பம்—இவன் இருந்தால் உலகில் எனக்கு வேறு என்ன வேண்டும்? வாழ்க்கை என்பது இதுதான். உண்மையான இன்பத்தை ஒரு தரமாவது அநுபவிப்பதுதான்.'

அவள் இருதயம் நிதானமாய் அடித்துக்கொண்டிருந்தது: ஆனந்தத்தையும் தாண்டி ஆழ்ந்த நிம்மதி அவள் இருதய மையத்தில் புதைந்து கிடந்தது. முகத்தில் இப்போது சிரிப்பும் இல்லை. சோகத்தில் உருவான ஒரு கம்பீரமும் உறுதியும் வேறொரு மார்க்கமும் இல்லாத நிலையில் தோன்றும் நிச்சலனமும் அவள் முகத்தில் குடிகொண் டிருந்தன.

குழந்தையைத் தோள்மேல் சார்த்திக்கொண்டு புடைவைகளை ஒரு கையில் பிடித்தவாறு வீட்டுக்கு வெளியே

வந்தாள். சற்று நின்று திரும்பி வீட்டைப் பார்த்தாள். பிறகு வானத்தைப் பார்த்தாள். குளிர்ச்சியான காற்று அவளுக்கு நல்வரவு கூறிப் பரந்த உலகத்துள் அழைத்தது. குழந்தைமேல் ஒரு புடைவையைப் போர்த்தினாள். ஒரு பெருமூச்சுடன் அவனைக் குனிந்து பார்த்தாள். உடனே அவள் முகம் மலர்ந்தது. தீர்மானமாகத் தன் முகத்தைத் தெருவின் பக்கம் திருப்பிக்கொண்டு அந்த இருண்ட இரவில் தன் விடிவை நோக்கி நடந்து செல்லலானாள்.

முற்றும்